
www.tamilarangam.net

# தர்மபுரி தோழர் இரவீந்திரன் 'மோதல்' என்ற பெயரில் காவல் துறையால் கொல்லப்பட்டது குறித்த உண்மையறியும் குழுவின் அறிக்கை.



தாயகம் வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூலின் பெயர் : 10.01.2000 அன்று தர்மபுரியில் தோழர் இரவீந்திரன் 'மோதல்' என்ற பெயரில் கொல்லப்பட்டது குறித்து பியுசிஎல் தலைமையிலான மனித உரிமை அமைப்புகளின் ஒருங்கிணைந்த உண்மையறியும் குழுவின் அறிக்கை.

பதிப்பாளர் : தாயகம் வெளியீடு

நாள் : மார்ச் 29, 2000

கிடைக்குமிடம் : கோ. சுகுமாரன்

39, முத்துமாரியம்மன் கோயில் தெரு

புதுச்சேரி - 1

விலை : உரு. 10/-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

தாயகம் வெளியீட்டாளர்கள் ஏன் இந்த அறிக்கையை-ரவீந்திரன் கொலை பற்றிய மனித உரிமை அமைப்புகளின் உண்மை அறியும் குழுவின் அறிக்கையை-வெளியிட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. நாம் தமிழ்நாடு விடுதலையைக் கோருபவர்கள்-அதற்கான சனநாயகப் போராட்டத்தையும் கருத்துப் பரப்பலையும் முன்னின்று நடத்த வேண்டும் என்று கருதுபவர்கள். எனவே இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும் ஆவணங்கள் அனைத்தையும் தொகுத்து மக்கள் முன்வைக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

கடந்த பல பத்தாண்டுகளாக மோதல் என்ற பெயரில் சனநாயக ரீதியாகப் போராடுவோரை சுட்டுக்கொல்வது, இந்த சமூக விடுதலைக்காக போராடுவோரை இல்லாதொழிப்பது, இந்த அரசு- காவல் துறையுடன் ஒத்துழைக்காத அப்பாவி மக்களை கொன்றொழிப்பது என்ற போக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதை நாம் அறிவோம். மக்களின் பிரச்சனைகளுக்காக-சமூக மாற்றத்திற்காக போராடுவோர் அவரவருக்குத் தெரிந்த, நம்பிக்கை கொண்ட வழிகளில் போராடிவருவது மேன்மேலும் கூர்மையடைந்து வருகிறது.

இதில் முதல் வகையினர் இந்த சமுக அமைப்பை மாற்ற வேண்டும் அதாவது இந்த அரசமைப்பை ஆயுதப் போராட்டத்தின் மூலம் மட்டுமே அகற்றி விட்டு புதிய சோசலிச சமூகத்தை படைக்க முடியும் என்று கருதுவதோடு நில்லாமல் அதை செய்யவும் முயலும் போராளிகள்.

இரண்டாம் வகையினர், இந்த சமூக அமைப்பை மாற்ற வேண்டும் அல்லது சீர்திருத்த வேண்டும் என்ற ஆவல் கொண்டு இந்த அரசமைப்பை சனநாயகப் போராட்டங்கள் வழியே நிர்பந்தம் செய்வதன் மூலம் மக்களுக்கு தேவையானவற்றை - புதிய அரசமைப்பைக் கூட பெறமுடியும் எனக் கருதுவோர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது வகையினர் சிறுசிறு பிரச்சனைகளுக்காக அரசுடன் முரண்படுவோரும், தமது அன்றாடவாழ்வில் அரசு குறுக்கிடும் போது எதிர் வினை புரிவோரும் ஆவர். இவர்கள் எந்த அமைப்பு வடிவமாகவும் அரசை எதிர்க்காத போதும் அரசுடன், ஒத்து போகாத ஒரே காரணத்தினாலேயே பாதிக்கப் படுவோர்.

இந்திய துணைக் கண்ட அரசு இந்திய அரசியல் சட்டத்தின் படி அனைத்து மக்களின் அடிப்படை உரிமைகளை மதிப்பதாக கூறிக்கொண்ட போதும், சனநாயகப் போராட்ட வழிமுறைகளை பாதுகாப்பதாக கூறிக் கொண்ட போதும் இந்த ஆட்சியாளர்கள் மேற்கண்ட மூன்று தரத்தினரையும் ஒடுக்குவதிலும் இல்லாதொழிப்பதிலும், பழிவாங்குவதிலும் ஒரேதாரமாகவே முனைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இதில் முதல் வகைப்பட்டவர்களை பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

போராளிகள்-தீவிரவாதிகள் எப்போதும் உருவாவது கிடையாது. அவர்களை இந்த சமூக அமைப்பே உருவாக்குகிறது என்கிறார்கள் பெரிய அறிஞர்கள். அப்படி உருவாக்கப்படும் போராளிகள் எவரும் ஆயுதப் போராட்டத்தின் மேல் காதல் கொண்டவர்கள் அல்ல என்பது வெள்ளிடைமலை.

ஆனால் இவ்வாறானவர்களை, அனைத்து மக்களுக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் தருவதாக கூறிக்கொள்ளும் இந்திய ஒன்றிய அரசு எப்படி எதிர்கொண்டது என்று பார்ப்போம்.

1. அறுபதுகளின் இறுதியில் உழுபவருக்கே நிலம் சொந்தம் என்ற முழக்கத்தின் கீழ் எழுந்த நக்சல்பாரி புரட்சி வழியில் உழைக்கும் எழை மக்களின் விடுதலைக்காக போராடிய கோவையைச் சேர்ந்த எல். அப்பு என்பவரை தமிழ்நாடு காவல்துறை ரகசியமாக கொலை செய்தது. இன்று வரை அவர் என்ன ஆனார் என்ற மர்மத்தை தமிழ்நாடு அரசு அறிவிக்காமலேயே இருந்து வருகிறது.

இதே போன்று 1970 முதல் 80-ஆம் ஆண்டு வரை நாற்பதுக்கும் மேற்பட்ட நக்சல்பாரி அமைப்புத்தோழர்கள் போலீசுடனான மோதல் என்ற பெயரில் தருமபுரி, வடஆற்காடு மாவட்டங்களில் கொல்லப்பட்டனர்.

2. 1980-இல் நக்சல்பாரி அமைப்பைச் சேர்ந்த கண்ணாமணி என்பவர் சேலம் பயணியர் மாளிகையில் வைத்து போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் போலீசுடனான 'மோதலில்' இறந்ததாக வழக்கம்போல் காவல்துறை கூறியது.

3. 1982-இல் தருமபுரி மாவட்டம் சிறியம்பட்டு கிராமத்தில் பாலன் என்ற நக்சல்பாரி தோழர் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பேசிக் கொண்டிருந்தபோது 300க்கும் மேற்பட்ட போலீசுப் பட்டாளம் தேவாரம் தலைமையில் சூழ்ந்து கொண்டது. மக்கள் அடித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவைக்கப்பட்டு கலைந்து செல்ல கட்டாயப்படுத்தப் பட்டனர். பாலன் எதுவித அறிவித்தலும் இன்றி போலிசாரால் பிடித்துச் செல்லப்பட்டார். பின்னர் சென்னையில் வைத்து கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக பின்னர் செய்திகள் தெரிவித்தன.ஆனால் போலீசு அவர் உடலைக்கூட உறவினர்களிடம் ஒப்படைக்காமல் சாம்பலை மட்டுமே கொண்டுவந்து தந்தது.

4. வட ஆற்காடு திருப்பத்தூர் பகுதியில் எண்பதுகளில் நக்சல்பாரி தோழர் சிராளன் போலீசுடனான `மோதல்' என்ற பெயரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

5. 1987-ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம் பொன்பரப்பியில் வங்கிக் கொள்ளைக்கு முற்பட்டதாக கூறப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த அதன் தலைவர் தமிழரசன் மற்றும் தர்மலிங்கம், ஜெகநாதன், பழனிவேல், அன்பழகன், ஆகியோரை கியூ பிரிவு, சி.பி.சி.ஐ.டி. பிரிவு காவலர்கள் கொன்று விட்டு மக்களே அடித்துக் கொன்றதாக செய்தி பரப்பினர்.

6. இதே போல் 1993-ஆம் ஆண்டு தமிழக மக்கள் விடுதலைப் படை தலைவர் நாகராஜன்(எ)காராளன் சுட்டுக் கொல்லப்பட்டார், திண்டுக்கல் பகுதியில் ஒரு வீட்டில் தங்கியிருந்த நாகராஜனை காவல் துறை சுற்றி வளைத்த போது தப்பிக்க முயன்றதாக கூறி சைலேந்திரபாபு. (அப்போதைய மாவட்ட கண்காணிப்பாளர்), தலைமையிலான காவல்துறை சுட்டுக் கொன்றது.

7. தமிழ்நாடு விடுதலைப் படையின் தலைவர் என்று கருதப்பட்ட லெனின் 1994 மார்ச்சில் தென்னாற்காடு மாவட்டம்- நெய்வேலி அருகே ஒரு தற்செயலான குண்டு வெடிப்பில் காயமடைந்தார். சம்பவ இடத்தை உடனே சுற்றி வளைத்த காவல்துறையினர் அவரைக் காப்பாற்ற ஒரு முயற்சியும் செய்யாமல் கிட்டதட்ட 6 மணிநேரம் வேடிக்கை பார்த்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பின்னர் லெனின் இறந்த பிறகு சம்பவ இடத்தைப் பார்வையிட்ட டி.ஐ.ஜி. திலகவதி, லெனினை காப்பாற்றாமல் சாக விட்டதற்காக உள்ளூர் காவலர்களை கடிந்து கொண்டதை நாம் அறிவோம்.

8. இதே ஆண்டு செப்டம்பர் மாதம் தென்னாற்காடு மாவட்டம் வடலூர் அருகே ஒரு வெடிவிபத்தில், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்ததாக கருதப்பட்ட சின்னத்தம்பி என்பவர் காயமடைந்தார். இவர் காலில் மட்டுமே காயமடைந்த போதும், கடலூர் மருத்துவமனையில் வைத்து சரியான சிகிச்சை செய்யவிடாமல் ஜன்னி கண்டு இறந்து போகுமளவு மருத்துவர்களைக் கட்டாயப்படுத்தி அதில் வெற்றியும் பெற்றது காவல்துறை. சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாக பொய் கூறியது.

9. 1992-ஆம் ஆண்டு நீதி மன்றக் காவலில் இருந்த தமிழர் பாசறை இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்ட சந்திரன் என்னும் இளைஞரை

www.tamilarangam.net

விசாரணை என்று கூறி ஐ.ஜி. அலுவலகம் அழைத்துச் சென்றனர் போலீசார். அங்கு அவர் தப்பிக்க முயலுகையில் மாடியிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டார் என்றது காவல்துறை. ஆனால், அவர் காவல்துறையால் சித்திரவதைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார் என்றே நம்பப்படுகிறது.

10. 1997-இல் ஆண்டிமடம் காவல் நிலையம் தாக்கப்பட்டது தொடர்பாக அந்த பகுதி உஞ்சனை கிராமத்தைச் சேர்நத சடையன் என்பவர் விசாரணை என்ற பெயரில் ஜெயங்கொண்டம் காவல் துறையினரால் அழைத்துக் செல்லப்பட்டார். சிலநாட்களுக்கு பிறகு சடையன் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று கூறி அவரின் பிணத்தை காவல் துறை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தது ஆனால், அவர் காவல்துறையினராலேயே வதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார் என்று பொதுவாக கூறப்படுகிறது.

11. நெல்லை மாவட்டம் இராசப்பாளையம் பகுதியில் விவசாயிகளுக்காக போராடியவர் மச்சக்காளை என்பவர் ஆவார், இவரையும் அடித்தே கொன்று போட்டது காவல்துறை.

இது போன்று இந்த சமூக அமைப்பை மாற்ற வேண்டி-விடுதலை வேண்டி தமக்குத் தெரிந்த வழிகளில் போராடியவர்களை. தான் அனைத்து மக்களுக்கும் பாதுகாவலன் என்று இந்த அரசு கூறிக்கொண்ட போதும்-குற்றச் செயல்களைத் தடுக்கவே போலீசு - நீதி மன்றம் இருப்பதாகக் கூறிக்கொண்டபோதும் தான் குற்றவாளிகள் என்று கூறுவோரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கித் தர எண்ணுவதே இல்லை. மாறாக இது போன்றவர்களை இல்லாதொழிப்பதன் மூலமே பிரச்சனைகளைத் தீர்த்து விட முடியும் என எண்ணுகிறது.

சந்தன வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் மற்றும் கூட்டாளிகள் அய்யன் துரை, ரங்கசாமி போன்றவர்கள் சரணடைந்து சிறையில் இருந்த போது கூட தமக்கு அவர்கள் அச்சுறுத்தலாகவே எப்போதும் இருப்பர் என நினைத்து கர்நாடக காவல்துறை சித்திரவதை செய்து சயனைடு மூலம் கொல்லப்பட அனுமதித்தது தமிழக காவல்துறை. நாம் காவல்துறையினர் எந்த ஒரு குற்றச் செயலும் நடைபெறாமல் தடுப்பதையும், குற்றவாளிகள் என்று கூறப்படுவோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் முன் நிறுத்தப்படுவதையும். அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுவது குறித்தும் கருத்து சொல்ல விரும்பவில்லை. ஆனால், காவல் துறையினர் தாமே நீதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் கண்மூடித்தனமான கொலைகள், சித்திரவதைகள், சொத்துகளை நாசமாக்குதல் போன்றவற்றில் ஈடுபடுவது என்பது இந்த அரசமைப்பை எதிர்த்து சனநாயக வழியில் நம்பிக்கை கொள்ளாமல் ஆயுதப் போராட்டம் மூலமே சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று கூறி அதன் வழியில் போராடி வருவோரின் வாதத்திற்கு வலிமை சேர்ப்பதாக அமைகிறது-அமையும் என்கிறோம். இதனாலேயே போலீசால் கொல்லப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகள் மக்களால் வரலாற்று நாயகர்களாக நினைத்து போற்றப்படுகின்றனர்.

இரண்டாம் வகைப்பட்டவர்கள்:

1. 1970 ஆம் ஆண்டு கீழ் தஞ்சை பகுதியில் கீழ் வெண்மணி என்னும் கிராமத்தில் தங்களின் கூலி உயர்வுக்காக தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் சங்கம் அமைத்துப் போராடினர். இந்த ஒரே காரணத்திற்காக 42 தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் ஒரு குடிசையில் வைத்து கோபாலகிருஷ்ண நாயுடு என்னும் நிலப்பிரபுவால் உயிருடன் கொளுத்தப்பட்டனர். இந்த சாதிவெறி பிடித்த நிலப்பிரபுவை நீதி மன்றம் நிரபராதி எனக்கூறி விடுவித்தது.

2. எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தில் சென்னை மெரினா கடற்கரையில் தங்களின் வாழும் உறைவிட உரிமைக்காக போராடிய மீனவர்களை காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தி ஒடுக்கியது.

3. 1987 காலகட்டங்களில் பிற்படுத்தபட்ட சாதியைச் சேர்நத வன்னியர்கள் அமைப்பாகி இடஒதுக்கீட்டுக்காக போராடியபோது கட்டவிழ்த்து விடப்பட்ட காவல்துறையினரின் காட்டுமிராண்டித்தனம் அளவிடமுடியாதது.

4. 1980 களில் நாராயணசாமி நாயுடு தலைமையில் விவசாயிகள் சங்கம் அமைத்து போராடியதும் காவல்துறை அதனை கண்மூடித்தனமாக ஒடுக்கியதும் நாம் அறிந்ததே.

5. இந்திய ஒன்றிய அளவில் ஆந்திரம், பீகார் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் வாழும் உரிமை மற்றும் அடிப்படை உரிமைகளுக்காக போராடும்போது கடுமையாக அந்தந்த அரசுகளால் ஒடுக்கப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. 1990-களில் தங்களின் சாதிய சனநாயக உரிமைகளுக்காக போராடிய தாழ்த்தப்பட்டோர் மீது தமிழக அரசு ஏவிய அடக்குமுறை கொடுமைகள் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

6. இதுபோன்ற செயல்களில் அண்மைய எடுத்துக்காட்டு திருநெல்வேலி-தாமிரபரணி படுகொலையாகும். தங்களின் சம்பள உயர்வுக்காக சனநாயக வழியில் போராடிய அடித்தட்டு மக்கள் 20 பேர் கொன்றொழிக்கப்பட்டு ஆற்றில் வீசப்பட்டதும் பலர் காயப்படுத்தப்பட்டதும் கொடுமையானதாகும்.

7. மற்றுமோர் எடுத்துக்காட்டு தங்களுக்கு அடிப்படை வசதிகள் கோரி தேர்தல் புறக்கணிப்பு செய்த திண்டுக்கல் மாவட்டம் குண்டுப்பட்டி மக்கள் இருவர் காவல்துறையால் கொல்லப்பட்டதும், பலர் காயமடைந்ததும், மக்களின் சொத்துக்கள் சூரையாடப்பட்டதும் 1996 ஆண்டு தேர்தலின் போது நிகழ்ந்தது.

இவ்வாறு தமது அடிப்படை வசதிகளுக்காகவும். சமூக அவலங்களை பொறுக்க முடியாமலும். சனநாயக கோரிக்கைகளுக்காகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பாகியும்-அமைப்பாகாமலும் போராடிவரும் மக்கள் மீது அரசுகள் நடத்தும் காட்டுமிராண்டித்தனத்துக்கு எடுத்துக்காட்டுகளே மேற்குறிப்பிட்ட சில நிகழ்வுகள்.

மிக எளிமையாக சனநாயகப் போராட்டங்களை நடத்தும் இந்த வகைப்பட்டவர்களை தீவிரவாதிகள்- பயங்கரவாதிகள் -போராளிகள் என முத்திரை குத்தி கொன்றொழிப்பது இந்த அரசுகளின் வாடிக்கையாக உள்ளது. மக்களின் பிரச்சனையை பேசித்தீர்ப்பது, சனநாயக உரிமைகளை பாதுகாப்பது போன்றவற்றில் இந்த அரசுகள் கவனமெடுப்பதே இல்லை. போராளிகள் பிரச்சனையாக இருந்தாலும்சரி சனநாயக சக்திகளின் போராட்டமாக இருந்தாலும்சரி இதனை ஒரு சமூக-பொருளாதார பிரச்சனையாகப் பார்க்காமல் வெறும் சட்டம்-ஒழுங்கு பிரச்சனையாகவே அணுகுகின்றன. இதனாலேயே மக்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு சனநாயகப் போராட்டங்களின் மீது நம்பிக்கையில்லாமல் ஆயுதப் போராட்டம் நோக்கி கவனம் செல்கிறது.

மூன்றாவது வகைப்பட்டோர்:

அப்பாவி பொதுமக்கள் எவ்வித அரசியல் காரணங்களுமின்றி சிறுசிறு பிரச்சனைகளுக்காக காவல்துறையினரிடம் சிக்கிக்கொண்டு சித்திரவதைப் படுவதும் கொல்லப்படுவதுமே இவ்வகை ஆகும். குறிப்பாக பெண்கள் இதில் பாதிக்கப்படுவது மிகக் கொடுமையானதாகும். இத்தகைய விஷயங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. எண்பதுகளில் தர்மபுரி மாவட்டம் நவி என்னும் இடத்தில் கல்பனாசுமதி என்ற ஆசிரியை போலீசாரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டது பரவலாக அறியப்பட்ட செய்தியாகும்.

2. 1992-இல் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் பத்மினி என்ற பெண்ணை கணவர் முன்பே பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, கணவர் நந்தகோபாலை கொன்று விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக கதைவிட்டனர் போலீசார்.

3. 1994 -இல் தெ,ஆ. மாவட்டம் முத்தாண்டிகுப்பம் காவல் நிலையத்தில் வசந்தா என்ற இளம்பெண் காவலர்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

4. 1993 -ஆம் ஆண்டு தெ.ஆ. மாவட்டம் குள்ளஞ்சாவடி காவல் நிலையம் எதிரே காவலர்களுக்கும் அந்த பகுதியில் வசிக்கும் விருப்புலிங்கம் என்பவருக்கும் ஏற்பட்ட கைகலப்பின் போது துப்பாக்கியால் சுட்டு விருப்புலிங்கம் கொல்லப்பட்டார். எந்தவிதமான முகாந்திரமும் இன்றி நடந்தது இந்த கொலையாகும்.

5. இதே போல் 1996-இல் பழங்குடி இனத்தைச் சேர்ந்த அத்தியூர் விஜயா என்ற பெண் புதுச்சேரி காவல்துறையினரால் பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6. 1991-இல் இராசீவ் கொலைவழக்கில் தொடர்புடையவர் எனக்கூறி கோடியக்கரை சண்முகத்தை தடுத்து வைத்து விசாரணை என்ற பெயரில் கொன்று விட்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் என பொய்யுரைத்தது மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ).

7. சந்தனக் காட்டு வீரப்பனைத் தேடுகிறோம்-பிடிக்கிறோம் என்று கூறிக்கொண்டு ஈரோடு, சேலம், தர்மபுரி மாவட்ட காட்டுப்பகுதிகளிலுள்ள மக்களிடம் காவல் துறையும், சிறப்பு அதிரடிப் படையினரும், காட்டிலாகாவினரும் செய்யும் கேடுகள், வன்முறைகள், அட்டூழியங்கள். படுகொலைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதும், போதையில் ஆழ்த்துவதும் தொடர்ந்து இன்று வரை நடந்து கொண்டு வருகிறது.

8. வாச்சாத்தி, சின்னாம்பதி போன்ற மலைவாழ்மக்கள் கிராமங்களில் காவல் துறையும், காட்டிலாகா அதிகாரிகளும், அத்துறையினரும் நிகழ்த்திய பாலியல் வன்முறைகள், மக்கள் சொத்துக்களை சூரையாடியது போன்றவை உச்ச பட்சமாகும்.

மேற்கூறியவை அப்பாவி மக்கள் எந்தவித அரசியல் காரணங்களுமின்றி பாதிக்கப்பட்டது பற்றிய எண்ணற்றவற்றிலிருந்து எடுத்துக்காட்டப்பட்ட சில நிகழ்ச்சிகளே ஆகும். இது போன்ற சம்பவங்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் பெருகி வருகிறது. காவல் துறையினரே நீதித்துறையையும் கையில் எடுத்துக் கொண்டு கோரத்தாண்டவம் ஆடி வருகின்றனர் என்பதே உண்மை.

இது போன்ற நிலைமைகளில் மக்களின் அடிப்படை சனநாயக உரிமைகள் குறித்து எந்தவித அக்கறையும் இந்த அரசுகள் கொள்ளாத போது மனித உரிமை அமைப்புகள், சனநாயக சக்திகளின் கடமை என்பதும் செய்ய வேண்டிய வேலைகள் என்பது மிகவும் அதிகமாக உள்ளன.

குறிப்பாக மூன்றாவது வகைப்பட்ட அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்பட்ட விசயங்களில் மனித உரிமை அமைப்புகளும், சனநாயக சக்திகளும், இடது சாரி சக்திகளும் எடுத்துக் கொண்ட அக்கறையும் கவனமும் பாராட்டுக்குரியன.

தமிழக காவல்துறை வரலாற்றிலேயே போலீசார் குற்றவாளிகள் என்று நீதிமன்றங்களில் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதும் மனித உரிமை. சனநாயக அமைப்புகளின் இடையறா போராட்டத்தின், கருத்துப்பரப்பலின் காரணமாகவே என்றால் அது மிகையாகாது.குறிப்பாக சிதம்பரம் பத்மினி வழக்கில் எதிரிகளான காவல் துறையினருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை பெற்றுத்தர இறுதி வரை நின்றன இவ்வமைப்புகள்.

குள்ளஞ்சாவடி விருப்புலிங்கம் கொலை வழக்கிலும் அப்பகுதி மக்கள், ஒரு சில அரசியல் கட்சிகள், மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றின் இடையறாத போராட்டம் வழக்கை சரியாக கொண்டு

www.tamilarangam.net

சென்றது ஆகியவற்றின் காரணமாகவே எதிரிகளான போலிசாருக்கு ஆயுள்தண்டனை கிடைத்தது.

கொடியங்குளம் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதலை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதற்கும் இதற்கு காரணமான சமூக பொருளாதார நிலைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கும் இது போன்ற அமைப்புகள் மற்றும் சில தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளின் கடுமையான உழைப்பே காரணம்.

இரண்டாவது வகைப்பட்ட சமூக அவலங்களைப் பொறுக்க முடியாமல் போராடுவோரும் தங்களின் சனநாயக உரிமைகளுக்காக அமைப்பாகி போராடுவோரும் பாதிக்கப்படும் போதும் மனித உரிமை அமைப்புகளும் சனநாயக சக்திகளும் ஒன்று பட்டு போராடுவது குரல் எழுப்புவது என்பது குறைவாகவே போதாததாகவே உள்ளது.

இதில் தாழ்த்தப்பட்ட இயக்கங்களைச் சார்ந்தோர் பாதிக்கப்படும் போது மற்ற பிற்படுத்தப்பட்ட அமைப்புகள் இதனைக் கண்டித்து குரல் கொடுக்கத் தயங்குவதும், பிற்படுத்தப்பட்ட அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்படும் போது பிற தாழ்த்தப்பட்ட இயக்கங்களைச் சார்ந்தோர் இதனைக் கண்டிக்கத் தயங்குவதும், இடதுசாரி அமைப்புகள் அரசின் அடக்குமுறைக்கு ஆளாகும்போது பிற சனநாயக அமைப்பினர் கண்டு கொள்ளாத போக்கும் அதிமாக உள்ளது.

அனைத்து வகைப்பட்ட மக்களும் இயக்கங்களும் தங்களின் அடிப்படை சனநாயக உரிமைகளுக்காக போராடும் போதும் அமைப்பு கட்டும் போதும் அரசின் அடக்கு முறையை சந்திக்கும் போது பிரிந்து கிடப்பது என்பது ஒடுக்குகின்ற அரசுக்கு வலு சேர்ப்பதாகவே அமைந்து விடுகிறது. மனித உரிமை, சனநாயக இயக்கங்களும் அந்தந்த பகுதிகளில் பலம், பலவீனம் ஆகியவற்றிற்கேற்ப பிரச்சனைகளை கையிலெடுத்து போராட வேண்டியுள்ளது.

இதில் தாமிரபரணி படுகொலைகள் மக்களிடம் பேசப்பட்டதுபோல வடமாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல்கள் பேசப்படவில்லை. நக்சல்பாரிகள் மீதான காவல் துறையினர் காட்டுமிராண்டி தர்பார் குறித்து இதர அமைப்புகள் அதிகமாக குரல்கொடுப்பதில்லை.

தமிழ்தேசிய உணர்வாளர்கள் தங்களின் மொழி, இன, உரிமைகளுக்காக சனநாயக வழிகளில் போராடும் போதும். இதனை அரசு மிருக்ததனமான ஒடுக்குகிறது, இதனை கண்டிக்கத் தயங்கும்சில இடதுசாரி அமைப்புகள் அரசோடு சேர்ந்து கொண்டு இவர்களை மொழி வெறியர்கள் என முத்திரை குத்துவது என்பது அரசின் ஒடுக்கு முறைக்கே வலுச் சேர்க்கிறது.

இது இவ்வாறு இருக்க இந்த சமூக அமைப்பை ஆயுதப் போராட்டத்தின் மூலமே மாற்ற இயலும் -ஒரு வன்முறை போராட்டமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச பயங்கரவாதத்திற்கு சரியான பதிலைத் தர இயலும் என்று எண்ணி ஆயுதம் ஏந்தி போராடி வரும் போராளிகள்-தீவிரவாதிகள் என்று சொல்லப்படுவோர் பற்றிய பிரச்சனைகளில் மனித உரிமை சனநாயக சக்திகளின் குரல் மிகக் குறைவாகவே உள்ளது.

நாம் ஏற்கனவே சொன்ன படி இது போன்ற வன்முறைப் போராட்டங்களுக்குக் காரணம் இந்த சமூக-பொருளாதார அமைப்பே - இந்த இந்திய அரசியல் சட்டமே என்பதை நாம் உணரவேண்டும். இந்த அரசியல் அமைப்பு மக்களின் பிரச்சனைகளை தீர்க்காது-தீர்க்க முடியாது என்று சிலர் கருதுவதாலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தி போராட தலைப்பட்டுள்ளனர். உண்மையிலேயே இந்த அரசு மக்களை பாதுகாப்பதற்காகவே மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்ப்பதற்காகவே உள்ளது என்றால் இவற்றை அரசியல் சட்டத்தின்படி உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறல்லாமல் சட்டம் - நீதிமன்றங்களை புறக்கனித்து விட்டு போலீசு கொலை வெறியாட்டங்களில் ஈடுபடும் போது - அவர்கள் போராளிகளானாலும் சரி-அவர்களின் தார்மீக ஞாயத்தின் குரல்வளை மட்டுமல்ல அவர்களே ஒழிக்கப்படும் போது மனித உரிமை சனநாயக சக்திகளின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

இதுபோன்ற தருணத்தில் சனநாயக போராளி இரவீந்திரன் கோழைத்தனமாக காவல்துறையினரால் கொல்லப்பட்டது குறித்து உண்மையறியும் குழு அமைத்து உண்மையை வெளிச்சத்துக்கு கொண்டுவந்த மனித உரிமை ஆர்வலர்களை பாராட்டுகிறோம். இந்த அறிக்கையை பதிப்பிக்கும் வாய்ப்பு கிடைத்தது குறித்து பெருமை அடைகிறோம். நம்மைவிட துணிச்சலாக வேகமாக செயல்பட்டு வரும் ஆந்திர பிரதேச மனித உரிமைக் குழுவின் கொய்யூரு `மோதல்' குறித்த அறிக்கையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. **வரும் காலங்களில் ஆந்திரம் போன்றே தமிழ்நாட்டிலும் மனித உரிமை அமைப்புகள் துணிந்தும், விரைந்தும் செயல்படும் என்று நம்புகிறோம். அதற்கு அனைவரும் துணைநிற்க வேண்டுகிறோம்.**

**பதிப்பாளர்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**10.01.2000 அன்று தர்மபுரியில் "மோதலின்" போது இறந்துபோன ரவீந்திரன் பற்றி பி.யு.சி.எல். தலைமையின் கீழான மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த ஒருங்கிணைந்த உண்மையறியும் குழுவின் அறிக்கை!**

10.01.2000 அன்று, தர்மபுரி மாவட்டத்தின் மாரண்டஅள்ளி காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில், போலீசாருக்கும் நக்சலைட் குழு ஒன்றுக்குமிடையேயான மோதலின் போது, ரவீந்திரன் என்னும் நக்சலைட் கொல்லப்பட்டார், அவரது கூட்டாளி சிவக்குமார் என்ற சிவா பிடிபட்டார் மற்றும் வேறு இரு நக்சலைட்டுகள் தப்பிவிட்டனர் என்னும் செய்திகள் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியாயின. தப்பியவர்களில் ஒருவரின் பெயர் ராமச்சந்திரன் என்றும், அவருக்கு ஒரு காலில் அடிபட்டிருந்தது என்றும் சில செய்தித்தாள்கள் தெரிவித்தன. டிசம்பர் 1999-இல் ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழு தலைவர்கள் மூவரின் மோதல் கொலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தர்மபுரி மாவட்டத்தில் 26.12.99 அன்று அரசுப் பேருந்துகள் இரண்டினை நக்சலைட்டுகள் எரித்து விட்டதாக கூறப்படும் வழக்கில் தேடப்பட்டவர்களில் ஒருவர் ரவீந்திரன் என்பது செய்தித்தாள்களில் வெளியான போலீஸ் தரப்பு செய்தியாகும்.

இந்த செய்தியின்படி

ரவீந்திரன் உள்ளிட்ட நக்சலைட்டுகளின் நடமாட்டம் குறித்த செய்தியறிந்து சிறப்பு காவல்படையினருடன் பெருங்காடு கிராமம் சென்ற போலீஸ், நக்சலைட்டுகள் தங்கியிருந்த பண்ணை வீட்டைச் சுற்றிவளைத்து, பிடிக்க முயன்றது. அவர்களை நோக்கி ரவீந்திரன் சுட்டதால், ஏ.கே-47 மற்றும் எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள் தாங்கிய போலீஸ் பதிலுக்கு சுட்டது. அப்போது ரவீந்திரன் கொல்லப்பட்டார், இருவர் தப்பிவிட்டனர். சென்னையைச் சேர்ந்த சிவக்குமார் பிடிபட்டார். இச்சம்பவம் முழுவதும் பொதுமக்கள் முன்னிலையில் உள்ளூர் மக்கள் ஒத்துழைப்புடன் நடந்தேறியது. இறந்துபோன ரவீந்திரனின் மனைவி ஆந்திராவின் மக்கள் யுத்தக்குழுவின் தீவிர உறுப்பினர் என்பதையும் செய்தித்தாள்கள் குறிப்பிட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

10.01.2000 தேதியிட்ட மாலைமுரசில் இன்னொரு செய்தியும் வெளியாகியிருந்தது. போலீசால் தரப்பட்ட விவரத்தை அடிப்படையாக கொண்டிருந்த அச்செய்தி, ரவீந்திரன் 7.1.2000 அன்று கைது செய்யப்பட்டார். அவர் போலீஸ் காவலிலிருந்து தப்ப முயன்றபோது சுடப்பட்டு இறந்தார் என்றது.

11.01.2000 அன்று, விதவையான நிர்மலா (விசாகப்பட்டினத்திலுள்ள ஆந்திர பல்கலை கழகத்தின் சட்டத்துறை பேராசிரியை) சென்னை உயர்நீதி மன்றத்தில் 7.01.2000 அன்று தன் கணவர் கே. ரவீந்தர் கைது செய்யப்பட்டு காவல் நிலையம் ஒன்றில் சித்திரவதை செய்யப்பட்டு போலீசால் கொல்லப்பட்டார் என்றும் அவரது உடலை மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் தன் வழக்கறிஞர் மூலமாக குற்றவியல் விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்தார். இம்மனுவை ஏற்றுக் கொண்ட உயர்நீதி மன்றம் கைரேகை அறிவியல் மற்றும் ஆய்வகங்களின் இயக்குநர் முன்னிலையில் மறு பிரேதப் பரிசோதனை விரைவில் முடிக்கப்பட்டு, வழக்கு விசாரணைக்கு வரும் 24.1.2000 வரை அறிக்கை ரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. தர்மபுரி அரசு பொது மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட உடல், பாதுகாப்பாக இருப்பதற்காக சேலம் அரசு பொதுமருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்தது. அது சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு 13.01.2000 அன்று மறு பரிசோதனை செய்யப்பட்டது.

தன் கணவரின் பெயர் கே. ரவீந்தர் என்று நிர்மலா தெளிவுபடுத்தியிருந்தாலும், போலீஸ் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ரவீந்திரன் என்ற பெயரே உண்மையறியும் அறிக்கை முழுதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அவரது இறுதிச் சடங்கிற்காக சென்னை வந்திருந்த அவரின் குடும்பத்தினரிடமிருந்தும், தொலைத்தொடர்பு துறை ஊழியர் சிலரிடமிருந்தும் ரவீந்திரனைப் பற்றிய சில செய்திகளை குழு உறுப்பினர்கள் பெற முடிந்தது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் கணகாணிப்பு பொறியாளராக பணி புரிந்து ஓய்வு பெற்ற கைலாஷ்நாத்தின் மகனான ரவீந்தர்(39) தொலைத் தொடர்பு துறையில் 1983-92 காலகட்டத்தில் இளநிலை பொறியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். பணியிலிருக்கும் போது தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார். தொலைத்தொடர்பு துறையின் எஸ்.எஸ்சி. கூட்டமைப்பை இயங்க வைப்பதில் முக்கியமானவராயிருந்தார். தமிழ்நாட்டு தொலைத்தொடர்பு இளநிலைப் பொறியாளர் அமைப்பின் செயலாளராகவும் இருந்த அவர், எல்லா பணியாளரது உரிமைகளுக்காகப் போராடினார். பணி நியமனத்தில் ரோஸ்டர் முறை நடைமுறை படுத்தப்படுவதற்காக போராடினார். பணியிலிருந்தபோது மண்டல் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டம் போன்ற இதர ஜனநாயக நடவடிக்கைகளிலும, வளைகுடா யுத்த எதிர்ப்பிலும் துடிப்புடன் பங்கேற்றார். 1993-இல் அவர் சட்டவிரோதமாக முத்தமிழ் முதல்வன் என்னும் உதவி காவல்ஆய்வாளரால் சிறைப்படுத்தப்பட்டார். இந்த சட்ட விரோதக் காவல் குறித்து வழக்கு தொடர்ந்தபோது, அது சட்டவிரோதம் என்பது நிரூபணமாகி உதவி காவல்ஆய்வாளர் தற்காலிக பணி நீக்கத்திற்குள்ளானார். சேலம் சிறையில் சட்டவிரோதக் காவலில் இருந்தபோது, சிறைகளில் நிலவுகின்ற மனிதாபிமானமற்றதும், ஆரோக்கிய கேடானதுமான நிலைமைகள் பற்றி ஆய்வு செய்ய, உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக்குழு தேவை என்று அவர் போராடினார். பின்னர், இறையூர் காவல் நிலையத்தில் சிறுவன் ஒருவன் எரிக்கப்பட்டதற்கும் அதே உதவி காவல்ஆய்வாளரே காரணமாயிருந்தார். இது தொடர்பான வழக்கிலும் ரவீந்திரன் இந்த உதவி காவல்ஆய்வாளரை அம்பலப்படுத்தியதால் அந்த ஆய்வாளர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். சிறை சீர்திருத்தங்களுக்காக அவர் பதிவு செய்த ரிட் மனு இன்னும் நிலுவையில் உள்ளது.

இச்சூழலில் மோதல் நிகழ்ந்த இடத்துக்குச் சென்று, உள்ளூர் மக்களையும் போலீசையும் இதர அதிகாரிகளையும் பேட்டிகண்டும் தொடர்பான மருத்துவ-சட்ட ஆவணங்களை திரட்டிடும் பொருட்டு சுயேச்சையான விசாரணை நடத்தும் உண்மை அறியும் குழு ஒன்றை உருவாக்க பி.யு.சி.எல். முடிவெடுத்தது. இதற்கிடையே உண்மை அறியும் பணியில் பங்கேற்க மற்ற மனித உரிமைக் குழுக்களும் விரும்பின. ஆகவே தேசிய பி.யு.சி.எல்.-இன் துணைத் தலைவர் கே. மனோகரனை அமைப்பாளராகவும் பின்வருவோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒருங்கிணைந்த உண்மையறியும் குழு உருவாக்கப்பட்டது.

**குழுவில் இடம் பெற்றோர்:**

1. கே. மனோகரன்
2. டாக்டர் பி. சிவக்குமார், பி.யு.சி.எல்., தமிழ்நாடு – புதுச்சேரி
3. டி.எஸ்.எஸ். மணி, மனித உரிமைகள் முயற்சி, (HRI) தமிழ்நாடு.
4. ஷீலு, தமிழ்நாடு பெண்கள் தொகுப்பு (TWC), சென்னை,
5. சந்திரா, தமிழ்நாடு பெண்கள் தொகுப்பு (TWC),
6. கோ. சுகுமாரன், செயலர், பி.யு.சி.எல்., புதுச்சேரி.
7. டி. கோபாலகிருஷ்ணன், செயலர், பி.யு.சி.எல்., கோவை மாவட்டம்.
8. பி. சந்திரன், உறுப்பினர், பி.யு.சி.எல்.. தமிழ்நாடு-புதுச்சேரி.
9. எஸ். கோபால், உறுப்பினர், பி.யு.சி.எல்.. தமிழ்நாடு-புதுச்சேரி.
10. பேரா. சி. பிரசாத், ஆந்திர பிரதேச மனித உரிமைகள் குழு (APCLC) விசாகப்பட்டினம்.
11. பி. சவுத்ரி, மக்கள் ஜனநாயக அமைப்பு (PDF), பெங்களூர்.
12. சி. ஸ்ரீராம், மக்கள் ஜனநாயக அமைப்பு (PDF), பெங்களூர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13. ஜி.போஜகுமார், வழக்குரைஞர், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு (HRPC). திருச்சி
14. ஆர். முருகானந்தம், வழக்குரைஞர், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு (HRPC).திருச்சி.
15. பி. நாராயணசாமி, வழக்குரைஞர், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு (HRPC). திருச்சி.
16. தமயந்தி, வழக்குரைஞர், தமிழ்நாடு மனித உரிமை பாதுகாப்பு சங்கம், ராசிபுரம்.
17. ஏ. செல்வரத்தினம், வழக்குரைஞர், தமிழ்நாடு பெண்ணுரிமை பாதுகாப்பு சங்கம், ஓமலூர்.

*மோதல் நிகழ்ந்த இடத்திற்கு குழுவின் வருகை*

18.01.2000 அன்று பாலக்கோடு வட்டம் மாரண்டஅள்ளியிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள சாத்திரமுட்லுவுக்கு உண்மை அறியும் குழு சென்றது. பின் அங்கிருந்து 4 கி.மீ. நடந்து பெருங்காடு என்னும் குக்கிராமத்தை குழுவினர் அடைந்தனர். இவ்விரு கிராமங்களும் மாரண்டஅள்ளி காவல்நிலைய எல்லைக்குள் வருபவை. சாத்திரமுட்லுவில் சுமார் 150 வீடுகளும் பெருங்காட்டில் 40 வீடுகளும் இருக்கும். இங்கு வசிப்போரில் பெரும்பாலோர் இருளராகவும், குறைந்த அளவில் வன்னியரும், இதர சமூகத்தினரும் உள்ளனர். சாத்திரமுட்லு ஊராட்சியில் ஓர் ஆரம்பப்பள்ளி உள்ளது. உயர் நிலைப்பள்ளியில் படிக்க மாணவர்கள் மாரண்டஅள்ளி போய்வர வேண்டும்: இங்கே ஆரம்ப சுகாதார நிலையம் கூட கிடையாது. பெருங்காட்டிலிருந்து ஒருசில மாணவர்கள் சாத்திரமுட்லு ஆரம்பப் பள்ளிக்கு வருகின்றனர். அதுவும் மதிய உணவுக்காகவே. சாத்திரமுட்லு போய்ச்சேர ஓடை ஒன்றைக் கடந்தாக வேண்டும். மழை நாளில் ஓடையில் வெள்ளம் பெருக்கெடுக்கும். பெருங்காட்டிலுள்ள இருளர்கஷ் சமீபகாலத்தில் குடியேறியவர்கள். அவர்களின் வீடுகளுக்கு ஒரு விளக்கு மின்வசதி கூட செய்துதரப்படவில்லை. (பெரும்பாலானவை ஓலைக்கூரை வீடுகள்). வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்படவில்லை. இம் மக்கள் வனப்பகுதி மற்றும் புறம்போக்கு நிலங்களில் கேழ்வரகு, சோளம் போன்றவற்றை பயிரிடுகின்றனர். இந்நிலப்பகுதிகள் தனக்குரியவை என்று மாரண்டஅள்ளியிலுள்ள அரிசி ஆலை உரிமையாளர் லோகேஷ் அய்யர் கூறிக்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்விருளர்கள் பிற்படுத்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கான சான்றிதழ் மற்றும் சலுகைகள் எதுவுமே பெற இயலவில்லை. தாங்கள் பயிரிடும் நிலத்துக்கு பட்டா வாங்கிக் கொடுப்பதற்காக ஆளுக்கு ரூ. 500- வீதம் லோகேஷ் அய்யர் கேட்பதாக குழுவினரிடம் பல இருளர்கள் தெரிவித்தனர். சுமார் 40 ஏக்கர் பயிர் செய்யப்படுகிறது. அவர்கள் கொஞ்சம் ஆடுகளையும் கோழிகளையும் வளர்க்கின்றனர். ரூ.20 வீதம் மாமூலாக ஒவ்வொரு ஆட்டுக்கென வனத்துறை காவலர்களுக்கு தரவேண்டுமென அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்பந்திக்கப் பட்டுள்ளனர். வனமகசூலை அவர்கள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை, புளிமகசூல் போன்ற ஏலங்களில் பங்கேற்பதற்கான நிதிவசதியும் இவர்களுக்கு கிடையாது. கோடைக் காலங்களில் உண்பதற்காக இருளக்கிழங்கை தேடிப்போவார்கள். 4 அடி தோண்டினால்தான் கிழங்கு அகப்படும். சிலர் இக்கிழங்குக் கொடிகளை வளர்க்கின்றனர். இம்மக்கள் காட்டில் விறகு வெட்டி தலைச்சுமையாக மாரண்டஅள்ளிக்கு எடுத்து வந்து விற்பதுண்டு. பருவந் தப்பியகாலங்களில் பெங்களூருக்கு கூலியாட்களாகப் போய் வீடு கட்டும் பணிகள் செய்து வாழ்க்கை நடத்துவர்.

இக்கிராமங்களுக்கு குழு போனபோது பல போலீசார் சாதாரண உடையிலிருப்பதை கண்டனர். சிலர் இரு சக்கர வாகனங்களில் பின் தொடர்ந்தனர். பெருங்காட்டில் தற்காலிகமாக ஒரு காவல் சோதனை மையம் உள்ளது. பாதுகாப்புக்காக தற்காலிகமாக வேலூரிலிருந்து இங்கு மாற்றப்பட்டுள்ள துணை ஆய்வாளர் கன்னையன் உள்ளிட்ட போலீசார் இருக்கின்றனர். இக்கிராமங்களில் போலீஸ் அடக்குமுறை இருப்பதாக பார்வைக்குத் தெரியவில்லை, ஆனால் சகஜமற்ற நிலை இருப்பதை உணர முடிந்தது. ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எ. ப் பலரையும் குழுவினர் பேட்டி கண்டனர். முதலில் அவர்கள் பேசத் தயங்கினர். பின்னர் மோதல் பற்றி அந்நியருக்கு எவ்விதமான தகவல் சொல்லவேண்டும் என போலீசால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனரோ அத்தகவலை மட்டுமே மெல்ல வெளிப்படுத்த தொடங்கினர். அவர்கள் சொன்னவற்றில் பெரும்பகுதி போலீஸ் தரப்பினை ஒத்திருந்தது. மோதல் நடந்தபோது தாங்கள் இல்லை என்பதைத் தெரிவித்தனர். சம்பவம் நிகழ்ந்தபோது தாங்கள் இருந்ததாக ஒத்துக்கொண்ட சிலர் பீதியுற்றிருந்தனர். போலீசால் பயிற்றுவிக்கப்பட்டபடி அவர்கள் சொன்னது-

ரவீந்திரனும், அவரது தோழர்களும் 9.01.2000 அன்றுதான் அக்கிராமத்துக்கு வந்தனர். சிலபாடல்களைப் பாடிவிட்டு இரவுப்பொழுதை அங்கே கழித்தனர். மறுநாள் காலையில் ஊர்க்கவுண்டரின் பண்ணை வீட்டுக்குப் போனார்கள். அதன்பின் நடந்தவை எதுவும் தங்களுக்குத் தெரியாது என்றனர். யாரோ ஒருவர் இறந்து கிடப்பதாகவும் இன்னொருவர் கண்கள் கட்டப்பட்டு கிடப்பதாகவும் செய்தி பரவவே, அங்குபோய் பார்த்தாக கூறினர். 9.1.2000 அன்று ரவீந்திரன் மற்றும் மூவருக்கு உணவளித்ததாக கூறப்படுவோரின் குடிசைகளுக்கு குழு போய்ப் பார்த்தது. இந்நான்கு நபர்களும் முதல் முறையாக வந்தது போன்ற மனப்பதிவை உண்டாக்க அவர்கள் முயன்றனர்.

கிராமத்தினரின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்கின்ற போலீசாரும் மற்றவர்களும் சூழ்ந்திருக்க, ஒருசில தினங்களுக்கு முன்பாக நிகழ்ந்த மோதல் சம்பவத்தின் நினைவு அலைகழிக்க, அவர்கள் பீதியின் பிடியிலிருப்பதை குழுவினர் உணர்ந்து கொண்டனர். இருப்பினும், அவர்களிடமிருந்து குழுவினரால் ஓரளவு உண்மையைப் பெற முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதாரணமாக, ரவீந்திரன் மற்றும் தோழர்களின் நடத்தைபற்றி வினவியபோது, அவர்கள் நல்லவர்கள், கிராமத்தினரின் வறுமை குறித்தும் அவர்களின் பிரச்னைகள் குறித்தும் அக்கறை கொண்டவர்கள் என்ற பதிலை தன்னெழுச்சியாகத் தந்தனர். செய்தித் தாள்களில் வந்திருப்பதுபோல, உணவு பெறுவதற்காக ரவீந்திரனும் கூட்டாளிகளும் உங்களை கட்டாயப்படுத்தினார்களா? என்றதற்கு: ஷஷநாங்களும் அவர்களும் பயப்பட என்ன இருந்தது ஒன்றுமில்லை□□ - என்றனர். எங்களது வறிய நிலை பற்றிதான் அவர்கள் பேசியதும், பாடியதும். அவர்கள் மரியாதை மிக்கவர்கள், அன்பானவர்கள், உணவும் இருப்பிடமும் வேண்டுமென பணிவாக வேண்டினர். ரவீந்திரனின் சாவுபற்றி குறிப்பிடப்பட்ட போதெல்லாம் சில மூதாட்டிகள் கதறினர். மக்களின் மோசமான நிலை குறித்து, கேள்விப்படும் ரவீந்திரனும் நண்பர்களும் பேசுவார்கள், பாடுவார்கள் என்று சிலர் குறிப்பிட்டனர். இவையெல்லாம், ரவீந்திரனும் அவரது தோழர்களும் 9.01.2000 அன்று தான் முதன் முதலாக கிராமத்திற்கு வந்தனர் என்று கூறப்படுவதை பொய்யாக்கின. ஊர்க்கவுண்டர் மல்லப்பனுடன் குழுவினர் பேசியபோதும் இப்பொய் அம்பலமாயிற்று. அவரது பண்ணை வீடு, இருளர்களின் குடியிருப்புகளிலிருந்து தொலைவாகவும் மோதலின் போது ரவீந்திரன் இறந்ததாக கூறப்படும் இடத்துக்குப் பக்கமாகவும் இருந்தது. பாதுகாப்பு பணிக்காக நியமிக்கப்பட்டிருந்த துணை ஆய்வாளர் கண்ணையனால் குழுவினர் அந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்த இரத்தக் கறைகளை குழுவினர் கண்டனர். துணை ஆய்வாளருடன் ஊர்க்கவுண்டர் வீட்டுக்குச் சென்ற குழுவினர் மல்லப்பனை பேட்டி எடுத்தனர்.

***மல்லப்பனின் பேட்டி:***

பெருங்காடு கிராமத்தில் பாட்டும் பேச்சும் முடிந்த பின்பு ரவீந்திரனும் அவரது நண்பர்களும் உணவு உண்டுவிட்டு இரவை அங்கேயே கழித்தனர். மறுநாள் காலை முற்றத்திற்கு வந்த அவர்கள் அரை கி.மீ தொலைவில் சாதாரண உடையில் நான்கு போலீசார் நிற்பதைக் கண்டனர். வீட்டின் பின்புறமாகப் போய்க்கொண்டிருந்தபோது இடப்புறத்திலிருந்து சாதாரண உடையிலிருந்து எட்டுப் போலீசார் தன்னை நோக்கி வருவதை ரவீந்திரன் கண்டார். ``அவர்களைப் பிடியுங்கள் அவர்களைப் பிடியுங்கள்" என்று போலீசார் கூச்சலிட்டனர். அதனைத் தொடர்ந்து துப்பாக்கி வெடிகள் கேட்டன. இருவரைப் போலீசார் மடக்கிவிட்டனர். அவர்களில் ஒருவர் தன் மேல்சட்டையினை நழுவச் செய்து தப்பி காட்டு வழியாக ஓடிவிட்டார். மற்றவரும் மேட்டுப்பகுதியை நோக்கி ஓட முயன்றபோது நிலைகுலைந்து விழுந்து விட்டார். அவர் போலீசை நோக்கிச் சுட, போலீசார் பதிலுக்குச் சுட்டனர். அவரால் தப்பிவிட முடிந்தது. ரவீந்திரனும் இன்னொருவரும் பண்ணை வீட்டின் பின்புறமாக இருந்ததால் அவர்களை மல்லப்பனால் காண இயலாது போயிற்று. ஒருவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுடப்பட்டு இறந்தார் என்று போலீஸ் கூறியபோதுதான், சம்பவம் நடந்த இடத்திற்குப் போய், கையில் துப்பாக்கியுடன் ரவீந்திரன் இறந்து கிடந்ததைக் கண்டேன். பிடிபட்ட இன்னொருவர் முழக்கங்கள் எழுப்பிக் கொண்டிருந்தார். ரவீந்திரனின் தோற்பையில் குண்டுகள் இருந்தன. தப்பிய இருவரின் பைகளிலும் ஒவ்வொரு கைத்துப்பாக்கி இருந்தது என்று விவரித்தார் மல்லப்பன்.

மல்லப்பனும் மற்றும் சிலரும் போலீசு சாட்சியங்களாக மாற்றப்பட்டிருக்கின்றனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். போலீசால் எவ்வளவு தான் திறம்பட பயிற்றுவிக்கப் பட்டிருந்தாலும், குழுவினருடன் பேசும்போது அவரது பேச்சில் சில நிரடல்கள் காணப்பட்டன. உதாரணமாக, ரவீந்திரன் வரும் ஒவ்வொரு முறையும் பாசத்துடன் அவரது பேத்தியை வாரியெடுத்து முடியை கோதி விடுவார் என்றார். அக்கிராமத்துக்கும் அவர் வீட்டுக்கும் ரவீந்திரன் வந்து போகக் கூடியவர் என்பதும், சில உளவாளிகள் மூலம் அவரின் நடவடிக்கைகள் போலீசுக்குத் தெரியும் என்பதும் இதன் பொருளாகும். அவரும் இதர சமூகத்தினரும் மோசமான நிலையில் இருந்து வருகிறார்கள் என்றும் லோகேஷ் அய்யருக்கு சொந்தமாயுள்ள நிலங்களில் இருளர்கள் சாகுபடி செய்கிறார்கள் என்றும் தெரிவித்தார். அவர்கள் எந்தச் சமயத்திலும் விரட்டப்படலாம் என போலீசார் மிரட்டினர். ஒருபுறம் வனத் துறையினராலும் இன்னொரு புறம் இம் மக்கள் போலீசாராலும் தொல்லைக்குள்ளாயினர். அவரின் கிராமத்திலிருந்து 5 பேர் கூட்டிச் செல்லப்பட்டு காவல் நிலையத்தில் வதை செய்யப்பட்டுள்ளனர். அந்நியரை அனுமதிக்கக் கூடாது என்றும் அத்தகையோரின் நடவடிக்கையைத் தெரிவிக்குமாறும் போலீஸ் எச்சரித்தது.

வீரையன் என்னும் கிராமவாசியும் இதே பீதியை வெளியிட்டார். கொல்லப்பட்டவர் (ரவீந்திரன்) தங்கமான மனிதர் என்றார். தானோ மற்றவர்களோ சொல்ல முடியாத விஷயங்கள் நிறைய இருக்கின்றன. 'உண்மையறியும் குழு' வரலாம், போகலாம், ஆனால் சிக்கலை எதிர்கொள்ளப் போகிறவர்கள் தாங்கள் தான் என்றார். இக்கிராமங்களிலிருந்து திரும்பிய குழு மாரண்ட அள்ளி காவல் நிலையத்திற்கு சென்றது. காவல் ஆய்வாளர் சிவசுப்ரமணியம் நிலையத்தில் இல்லை. துணை ஆய்வாளர் கிருஷ்ணனை குழு சந்தித்தது. 'மோதல்' நிகழ்ந்த இடத்தில் காவல் ஆய்வாளர் சிவசுப்ரமணியம் இருந்ததாகவும் சம்பவம் பற்றி மற்ற தகவல்கள் ஏதும் தனக்குத் தெரியாது என்றார் அவர். அது குறித்த தகவல் அறிக்கையைப் பார்க்க முடியுமா என குழுவினர் வற்புறுத்தியதற்கு, அறிக்கையின் அலுவலக நகல்கூட காவல் ஆய்வாளரால் அரசு வழக்குரைஞர்களுக்கு விளக்குவதற்காக சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது - உயர்நீதி மன்றத்தில் ரவீந்திரனின் மனைவி பதிவு செய்துள்ள மனு விசாரணைக்கு வரவிருக்கிறது என்றார். இச்சம்பவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறித்த எந்தவித தகவலையும், காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்தோ, காவல் ஆய்வாளரிடமிருந்தோ தான் பெற இயலும் என்றார்.

### குழு மற்ற கிராமங்களுக்கு போய்ப் பார்த்தல்:

இறந்துபோன ரவீந்திரன், தீவிரமாக பணிபுரிந்ததாக கூறப்படும் கொடாம்பட்டி, பூதிப்பட்டி, நத்தம், வெள்ளாளப்பட்டி மற்றும் மத்தான்கோட்டை கிராமங்களுக்கு குழு 19.01.2000 அன்று சென்றது.

பூதிப்பட்டியில் குழு, ஊர்க்கவுண்டரையும் சில கிராமத்தினரையும் சந்தித்தது. பெரும்பாலானவர்கள் மலைவாழ் பழங்குடியினர். ஊர்க்கவுண்டர் மற்றும் கிராமத்தினரைப் பொறுத்தவரை, வன நிலங்கள் பழங்குடியினருக்குச் சொந்தமானவையே. ஆடு மேய்ப்பதற்காக சட்ட விரோதமான வகையில் வனத்துறையினரால் வசூலிக்கப்படும் மாமூலைகட்ட மறுப்பது போன்ற விஷயங்களில் ரவீந்திரன் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். கந்துவட்டிக்கு முடிவு காணவும் அவர் போராடினார். கந்துவட்டி விவகாரங்கள் ஏழைகளுக்குச் சாதகமாக முடிவு கட்டப்பட்டன. ஊர்க்காரர்களின் நலனுக்காக ஏரியில் மடைகட்டி நீர் திருப்பி விடப்பட்டது. முன்னதாக ஏரி நீர் அவ்வளவும் உள்ளூர் நிலப்பிரபுக்கு சாதகமாக இருந்தது. நிலப்பிரபுவுக்கும் ரவீந்திரனுக்குமிடையேயான பூசலுக்கு இந்நீர்ப் பிரச்சனையே பிரதானமானது, அதுவே, ஆயுதங்களால் ரவீந்திரனைக் கொல்லுமளவுக்கு இட்டுச் சென்றிருந்தது. அதிலிருந்து ரவீந்திரன் மயிரிழையில் தப்பிவிட்டார். மடை கட்டியதும், தண்ணீர் திருப்பி விடப்பட்டதும் தங்களுக்குப் பெரிதும் உதவியிருப்பதாக ஊரார் எல்லோரும் ஒன்றுபடக் கூறினர். ஆனால் மடை கட்டியது விதிகளை மீறிய காரியம் என்கிறார் ஊர்க்கவுண்டர். எல்லா கிராமத்தினரும் ரவீந்திரனை அண்ணன் என்றே அழைக்கின்றனர்.

நத்தம், மத்தான்கோட்டை மற்றும் வெள்ளாளப்பட்டி கிராமங்களில் பெரும்பாலானவர்கள் ஆதித்தமிழர்கள். நத்தம் மற்றும் மத்தான் கோட்டையில் பல ஆதித்தமிழர்கள் பத்தாம் வகுப்புவரை படித்துள்ளனர். ஒருசிலரே கல்லூரி மட்டத்தை எட்டியுள்ளர். வெள்ளாளப்பட்டியில் பல ஆதித்தமிழர்கள் பட்டப் படிப்புக்காக கல்லூரிக்குப் போகின்றனர். தங்களுக்கு ஆதரவாக பல விஷயங்களில் ரவீந்திரன் ஆர்வங்காட்டினார் என்கின்றனர் இம்மூன்று கிராமத்தினரும். உதாரணமாக, அரசு உதவித் தொகை, புத்தகங்கள், சீருடைகள், இலவச துணிகள் ஆகியவை முறையாக வழங்கப்படுவதற்காக அவர் போராடினார். பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தால் கட்டாயமாக வசூலிக்கப்பட்ட நன்கொடையை நிறுத்துவதற்காகவும் போராடினார். கள்ளச்சாராயத் தயாரிப்பை எதிர்த்து பெண்களை அணி திரட்டினார். இக்கிராமங்களில் இவ்விற்பனை கடந்த இரு ஆண்டுகளாக இல்லாது போயிற்று. போலீஸ் உடந்தையாயிருக்க கடந்த ஓர் ஆண்டாக மீண்டும் கள்ளச்சாராயம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்றனர் பெண்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்ற ஆண்டு வன்னியருக்கும் ஆதித்தமிழர்களுக்குமிடையே சாதி மோதல் இருந்ததாக வெள்ளாளப்பட்டி கிராமத்தினர் தெரிவித்தனர். வன்னியர் பக்கம் நின்ற போலீஸ், ஆதித்தமிழர்களை மிரட்டியது. ஆதித்தமிழருக்கு ஆதரவாக நின்ற ரவீந்திரன் இவ்விவகாரத்தை சுமூகமாக தீர்த்து வைத்தார்.

10.01.2000 அன்றைய பெருங்காடு கிராமத்தில் `மோதலில்' போது போலீசாரிடமிருந்து தப்பியோடியதாக கூறப்படும் ராமச்சந்திரன் குடும்பத்தினரை குழுவினர் சந்தித்தனர். ராமச்சந்திரன் எங்கே இருக்கிறார் என்று அடிக்கடி விசாரிக்க வரும் போலீசார், அக்குடும்பத்தினரை தொடர்ந்து அச்சுறுத்தியிருக்கின்றனர். ராமச்சந்திரன் இருக்குமிடம் பற்றி தெரிவிக்காது போனால் ரவீந்திரனுக்கு நேர்ந்த கதியே ஏற்படும் என்று கூட போலீசார் மிரட்டியுள்ளனர். கிராமத்தில் பொதுக்குளம் தொடர்பாக எழுந்த பிரச்சினையில் போலீஸ் அச்சுறுத்தலுக்குப் பயந்து மறைந்து கொண்ட ராமச்சந்திரனை கடந்த எட்டு மாதங்களாகப் பார்க்கவில்லை என்கின்றனர் அவரது குடும்பத்தினர். டெல்லி மற்றும் ஆந்திராவிலிருந்து வந்துள்ள இயக்கத்தவர் போல மாறுவேடம் பூணுவது வரை எல்லா வழி முறைகளையும் போலீசார் பயன்படுத்தியுள்ளனர்.

உண்மை அறியும் பணியை முடித்துவிட்டு பிற்பகல் 6.30 மணிக்கு குழுவினர் திரும்பிக் கொண்டிருந்தபோது, நாய்க்கன் கொட்டாயில் நக்சலைட் தலைவர்கள் அப்பு மற்றும் பாலனுக்காக நிறுவப்பட்ட நினைவிடம் அருகே ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக கூடியிருந்தனர். கொஞ்ச நாட்களுக்கு முன்பு சில சிறுவர்கள் இந்நினைவிடம் அருகே கூடியதற்காக கைது செய்யப்பட்டதாக குழுவிடம் அவர்கள் தெரிவித்தனர். நினைவிடம் அருகே தாங்கள் ரவீந்திரனுக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருப்பதாக கூறினர். உடன் நின்றிருந்த பள்ளிச் சிறுவர்கள்கூட கைது செய்யப்பட்டதாக சில பெண்கள் முறையிட்டனர். அது வாராந்திர சந்தை நாளானதால், அங்கே கூட்டமாயிருந்தது. சந்தைக்கு வந்திருந்த ஒரு சிறுவனும் போலீசால் பிடிக்கப்பட்டிருக்கிறான். இதனை கேள்விப்பட்டதும் மதிக்கோன் பாளையத்திலுள்ள காவல் நிலையத்துக்கு விரைந்த குழுவினர், துணைக் காவல் கண்காணிப்பாளர் மார்டினை சந்தித்தனர். பாலன் நினைவிடம் அருகே கூடியது சட்ட விரோதமான கூட்டம் என்றார் அவர். சிறுவர்களை கலைந்து போகுமாறு கூறாமல் கைது செய்தது ஏன்? என்றதற்கு, பேருந்து எரித்த விவகாரத்தில் அவர்களுக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகித்ததால் கைது செய்ததாக கூறினார் மார்டின். கைது செய்யப்பட்டவர்களை பார்க்க வேண்டும் என குழுவினர் வற்புறுத்தினர். அங்கிருந்த எல்லோரும் இளைஞர்கள், அவர்களில் ஒருவனுக்கு 15 வயது தான். தங்களை போலீஸ் அடித்ததாகக் கூறிய இளைஞர்கள், காயங்களை காட்டினர். அவர்களை வளைத்துப் பிடித்து ஜீப்பில் ஏற்றியபோது உண்டானவை அக்காயங்கள் என்று விளக்கினர் போலீசார். 10 சிறுவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைது செய்யப்பட்டுள்ள தகவல் அவர்களின் தர்மபுரி வழக்குரைஞர் கபிலனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக துணைக் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார். எனினும், போலீஸ் விசாரணை மற்றும் தர்மபுரியில் எரிக்கப்பட்ட பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனரால் அடையாளப் பரிசோதனை முடிந்தவுடன் அவர்களையெல்லாம் விடுவித்து விடுவதாக உறுதியளித்தார். போலீஸ் அதிகாரிகளுடன் இவ்விவகாரம் பேசப்பட்டுக் கொண்டிருக்கையில், அருகாமையிலுள்ள கிராமங்களின் ஆண்களும் பெண்களும் காவல் நிலையம் வெளியே கூடினர். விசாரணை முடிந்ததும் சிறுவர்களையெல்லாம் விட்டு விடுவதாகவும், இனிமேல் அவர்களை அடிக்கவோ, சித்திரவதை செய்யவோ போவதில்லை என்றும் துணைக் கண்காணிப்பாளர் உறுதியளித்திருப்பதாக கூட்டத்தினருக்கு குழுவினர் தெரிவித்தனர். (பொது மக்கள் நெருக்கடியினால் சிறுவர்கள் விடுவிக்கப் பட்டிருப்பதை செய்தித் தாள்கள் மூலம் பின்னர் அறிய முடிந்தது).

எனினும், பேருந்து எரிப்பு விவகாரத்தை சாக்காக வைத்து போலீசார் கிராமத்தவரை அச்சுறுத்துகின்றனர், அவர்களது நடமாட்டம் மற்றும் பேச்சுரிமையை கட்டுப்படுத்துகின்றனர் என்றே குழு கருதுகிறது. புதியவர்கள் யாரேனும் வருவதை கண்காணித்து போலீசுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென இக்கிராமத்தவருக்கெல்லாம் அறிவுறுத்தப்பட்டுள்ளதென துணை கண்காணிப்பாளர் குழுவினரிடம் கூறினார்.

***இரவிந்திரன் கொலை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவரின் கருத்து:-***

19.01.2000 அன்று மாலையில் தர்மபுரி மாவட்டக் குழு அலுவலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டுப் பிரிவின் தலைமைச் செயற்குழு உறுப்பினரான தேவபேரின்பனை குழுவினர் சந்தித்தனர். தம் கட்சி வட்டாரங்கள் சேகரித்த தகவலின்படி, போலீசின் உளவாளி ஒருவர் மூலம் ரவீந்திரனின் நடமாட்டம் போலீசுக்கு தெரியவந்தது. ரவீந்திரனும் சிவக்குமாரும் 10.01.2000 அன்று காலையில் பெருங்காட்டில் பிடிபட்டு, ரவீந்திரன் மட்டும் கொல்லப்பட்டார், சிறிதுகாலம் போலீஸ் காவலில் இருந்த சிவக்குமார் பின்னர் நீதிமன்றக் காவலுக்கு உத்தரவிடப்பட்டது சற்று வியப்பளித்ததாய் இருந்தது, ஏனெனில் எண்பதுகளில் தேடப்பட்ட நக்சலைட்கள் பிடிபட்டவுடன் அவர்களைத் தீர்த்துக் கட்டுவதுதான் வாடிக்கை. அவரது இயக்கத்தில் முக்கிய நபர் ரவீந்திரனானதால் அவரை ஒழித்துக்கட்டுவதே அவ்வியக்கத்தை செயலிழக்கப் போதுமானதாகும் எனப் போலீசார் எண்ணியிருக்கக் கூடும். அவரைக் குற்றவாளி என்று கூற பேருந்து எரிப்பு சம்பவம் நல்லதொரு சாக்காகப் போய்விட்டது. அவர் தர்மபுரி மாவட்டத்தில் பணிபுரிய வந்தது 1994-இல்தான் என்றாலும், ரவீந்திரன் கடுமையான குற்றவாளி என்று பலப்படுத்துவதற்காக தொண்ணூறுகளின் ஆரம்பக்கட்ட வழக்குகளில் கூட அவரை தொடர்பு படுத்திவிடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்திரங்களில் போலீசார் ஈடுபட்டனர் என்றார் தேவபேரின்பன். நக்சலைட்டுகளுடன் தம் கட்சி அடிப்படையில் வேறுபடுவதாகவும், தம் கட்சியினருக்கும் நக்சலைட் அணியினருக்குமிடையே நேருக்கு நேர் மோதல்கள் நிகழ்ந்த காலமுண்டு என்றும் தெரிவித்தார். சில ஆண்டுகளுக்கு முன் தம் கட்சியினருக்கும் ரவீந்திரனுக்குமிடையேயும் மோதல் நிகழ்ந்தது, கட்சித் தலைமையின் தலையீட்டால் அது மேலும் வளராது தடுக்கப்பட்டது. எனினும், ரவீந்திரன் நாணயமானவர் என்றும் ஏழைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றும் தம் கட்சியினர் கண்டு கொண்டிருந்தனர் என்பதைக் குறிப்பிட்டார்.

நக்சலைட்டுகள் துப்பாக்கிகள் எடுத்துச் செல்கின்றனரா என்பது பற்றி தேவபேரின்பன் கருத்து தெரிவிக்கையில், இமமாவட்டத்திலுள்ள காடுகள் மூன்று தென் மாநிலங்கள் வரையும் நீண்டு செல்வதால், நவீன ரகங்கள் உள்ளிட்ட துப்பாக்கிகளைக் கடத்துதல் என்பது சகஜமானது, ஆனால் திருட்டுத்தனமாய் ஆயுதங்கள் வைத்திருப்போர் நக்சலைட்டுகள் அல்லர். மாறாக, நிலப்பிரபுக்களும், ஒப்பந்தக்காரர்களுமே என்றார். போலீசால் கைப்பற்றப்படும் சில கள்ளத்தனமான ஆயுதங்கள் கணக்கில் கொண்டு வரப்படாது, அவர்கள் விருப்பப்படி பயன்படுத்தப்படுகின்றன.

அத்தகு ஆயுதங்களில் ஒன்றினை, ரவீந்திரன் வைத்திருந்தார் என்னும் மனப்பதிவை உண்டுபண்ணுவதற்காக, மோதலுக்குப்பின் அவர் உடையுடன்அல்லது கையுடன் அத்தகு ஆயுதம் வைக்கப் பட்டிருக்க வேண்டும். நகரத்து வசதிகள் அவ்வளவாக இல்லாது, தண்டனைக்குரிய பிரதேசமாகக் கருதப்படும் தர்மபுரி மாவட்டத்தில், அரசாங்க அதிகாரிகள், குறிப்பாக காவல்துறை அலுவலர்களின், மனிதாபிமானமற்ற போக்கு மிகவும் மோசமாய் இருக்கிறது. அவர்கள் தமது ஆத்திரத்தையும், கோபத்தையும், விரக்தியையும் சாதாரண மக்களிடம் கொட்டித் தீர்க்கின்றனர். இம்மோதல் குறித்து நீதி விசாரணை செய்யப்பட வேண்டும் என்று சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம். ஆகிய இருக் கட்சிகளது மாநிலப்பிரிவுகள் கோரியுள்ளன என்பதையும் தெரிவித்தார் தேவபேரின்பன்.

### *அலுவலர்களுடன் சந்திப்பு*

*19.01.2000* அன்று தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரியிலுள்ள வருவாய் கோட்ட அலுவலர், தர்மபுரியிலுள்ள காவல் கண்காணிப்பாளர், வேலூரிலுள்ள காவல் துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல், மற்றும் தர்மபுரியிலுள்ள அரசு பொது மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் ஆகியோரை குழு சந்திக்க எண்ணியது. அன்றைய தினம் சுகாதார அமைச்சர் ஆற்காடு வீராசாமி தர்மபுரிக்கு வருகை புரிவது தொடர்பான பணிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் சாய்ராமும், வருவாய் கோட்ட அலுவலர் மதிவாணனும் தீவிரமாக இருந்ததால், அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் பொதுவான தனி உதவியாளர் பி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முத்துசாமியை குழு சந்தித்த போது, மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் வரும் விவகாரங்கள் குறித்து மனித உரிமை அமைப்புகள் மற்றும் செய்தியாளர்கள் உள்ளிட்ட யாரிடமும் கருத்து தெரிவிக்க தன்னால் இயலாது என்று கூறிவிட்டார்.

பின்னர் குழுவினர் தர்மபுரி அரசு பொது மருத்துவமனை சென்று மருத்துவ அலுவலர் டாக்டர் திரு. உலகநாதனைச் சந்தித்தனர். ரவீந்திரனின் உடல் 10.1.2000 அன்று மாலையில் பாலக்காடு மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டது. அங்கே எக்ஸ்-ரே வசதிகள் இல்லாததால் மறுநாள் காலையில் தன் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு டாக்டர் சுந்தரவதனத்தின் மேற்பார்வையில் டாக்டர்கள் வெங்கடேசன் மற்றும் கீதாராணியால் பிரேதப்பரிசோதனை செய்யப்பட்டது என்றார் அவர். தனது மருத்துவமனைக்கும் அதேபோல குளிர் பதனத்திற்காக சேலம் அரசு பொது மருத்துவ மனைக்கும் எடுத்துச் செல்லப்படுகையிலெல்லாம் உடல் சீராக இருந்தது என்றார் அவர். பிரேதப் பரிசோதனை குறித்த தகவல்களை சுகாதார சேவைகளின் இணை இயக்குநரிடமிருந்தோ விசாரணை செய்த வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்தோதான் பெற இயலும் என்று கூறிவிட்டார் டாக்டர் உலகநாதன். எனினும், ரவீந்திரனைக் கொன்ற துப்பாக்கி குண்டு பின்புறமாகப் பாய்ந்து பின் மார்பு வழியே வெளிவந்தது என்பதைக் குறிப்பிட்டார். குண்டு எத்தகையது, எஸ்.எல்.ஆர். துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்டதா என்று நாம் வினாவியபோது, தான் எறிபொறியியல் (ஆஅகககஅநபஜஇந) நிபுணரல்ல என்றார்.

### காவல்துறை கண்காணிப்பாளருட ன் நேர்முகம்:

குழுவினர் மதிக்கோன்பாளையம் காவல் நிலையத்திலிருந்த போது, கண்காணிப்பாளரிடமிருந்து ஏ.டி.எஸ்.பி. மார்டினுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. உண்மையறியும் குழு அங்கிருப்பதை ஏ.டி.எஸ்.பி.யிடமிருந்து அறிந்துகொண்ட கண்காணிப்பாளர் தன்னைச் சந்திக்க வருமாறு குழுவை அழைத்தார். அதன்படி 19.1.2000 அன்று இரவு 9 மணி வாக்கில் தர்மபுரியிலுள்ள கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு குழு சென்றது.

காவல்துறை கண்காணிப்பாளர் பி. கந்தசாமி தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டதோடு, போஸ்டனில் நிகழ்ந்த சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் இந்தியா சார்பாக தான் கலந்து கொண்டதாகவும், தன் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலர்களெல்லாம் தம் கடமையை நிறைவேற்றுகையில் மனித உரிமைகளை ஆதரிக்குமாறு அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார். தன்னுடைய பதவிக்காலத்தின் போது 24 மணி நேரத்திற்கும் அதிகமான தடுப்பு காவல் எதுவும் இருந்ததில்லை என்பதையும், விசாரணைகளின் போது போலீஸ் ஒருபோதும் மூன்றாந்தர முறைகளைப் பிரயோகித்ததில்லை என்பதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டவட்டமாக தெரிவித்தார். எந்த வகை குற்றம் புரிந்தோரும் நன்கு நடத்தப்படுவதுடன் விசாரிக்கப்படுகையில் அமர்ந்து கொள்ளுமாறு செய்யப்படுகிறது என்றார் அவர்.

நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் பற்றிப் பேசுகையில், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கந்து வட்டிக்குப் பணம் கொடுத்தல் போன்ற பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவர்கள் செய்துள்ள நல்ல பணியைப் பாராட்டினார். சீருடை அணிந்திருக்காவிட்டால், அவர்களுள் ஒருவனாக தான் இருந்திருக்கக் கூடும் என்றார் அவர்!

பொது மக்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், கந்துவட்டி வசூலிப்போர் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறினார். அவர்கள் தகுந்த விதிகளின்படி கைது செய்யப்பட்டாலும், கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் வெளியாகி விடுகின்றனர். அதற்கான காரணங்கள் பற்றி தான் ஒன்றும் கூற விரும்பவில்லை என்றார்.

பேச்சு சுதந்திரத்தை மதிப்பவன் என்ற வகையில், நக்சலைட்டுகள் உள்ளிட்ட அனைவரது அபிப்பிராயங்களையும் மதிப்பதாகக் கூறினார். தர்மபுரியில் பேருந்து எரிப்பு சம்பவங்கள் நிகழ்ந்த பிற்பாடுதான் தேடுதல் நடவடிக்கைக்கு நிர்ப்பந்திக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

7.01.2000 அன்று பிடிக்கப்பட்ட ரவீந்திரன் 10.01.2000 அன்று போலீஸ் காவலிலிருந்து தப்ப முயன்றபோது சுடப்பட்டு இறந்தார் எனவும். 10.01.2000 அன்று சுற்றிவளைக்கப்பட்ட ரவீந்திரன் மோதலில் கொல்லப்பட்டார் எனவும் முரண்படும் நிலைபாடுகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. ரவீந்திரனும் அவரது குழுவினரும் தன்னால் நடத்தப்பட்ட இதுபோன்ற வேறு இரு தேடுதல்களின்போது கைதாவதினின்று தப்பிவிட்டனர் என்று பதிலளித்தார் கண்காணிப்பாளர். இந்த விவகாரத்தில், ரவீந்திரனும் அவரது குழுவினரும் பெருங்காட்டில் இருப்பதாக உள்ளூர் மக்களிடமிருந்து கிடைத்த செய்தியின் அடிப்படையில், விரைந்து சென்ற போலீசார் அவர்களைச் சுற்றி வளைத்துச் சரணடையுமாறு கோரினர். போலீசாரிடமிருந்து தப்ப முயலும்போது, ரவீந்திரன் யுத்த மோதல் நிலையிலிருந்து கொண்டு சுட்டார். (சுடும்போது எதிராளிக்கு சிறிதளவு கூட தன் உடல் தென்படாதபடி வைத்துக்கொள்வது இது என்று கண்காணிப்பாளர் விளக்கினார்.) பதிலடியாக போலீஸ் சுட்டது. முட்டிக்கு கீழே சுட்டு செயலிழக்குமாறு ஏன் செய்யவில்லை? என்று குறிப்பாக கேட்டதற்கு, ரவீந்திரன் அமர்ந்த நிலையில் இருந்ததால் அது இயலாது போயிற்று என்றார் கண்காணிப்பாளர்.

``தேடும் நடவடிக்கை'' என்ற பெயரில் போலீசால் மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவது, எதற்கெடுத்தாலும் விசாரணை என்று ஆண்களையும்-பெண்களையும் பிடித்துப்போவது, அவர்களை அதிலும் குறிப்பாக பெண்களை மோசமான வார்த்தைகளால் வைவது, கிராமத்தினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூங்கும் போது நள்ளிரவில் சன்னல் வழியே டார்ச்லைட் அடித்து தேடுவது போன்றவற்றால் பல கிராமத்தவர் பீதியடைந்துள்ளனர் என்னும் கவலையை குழுவினர் கண்காணிப்பாளருடன் பகிர்ந்து கொண்டனர். நக்சலைட்டுகள் இரவு நேரத்தில் தான் ஒரு கிராமத்தை விட்டு இன்னொரு கிராமத்திற்கு நகர்வதால், இரவு நேரங்களில் தேடுதல் நிகழ்வதை கண்காணிப்பாளர் ஒத்துக் கொண்டார். பேருந்து எரிப்பு சம்பவத்தில் சந்தேகப்படுபவர்களையெல்லாம் இன்னும் கைது செய்து முடிக்காததால் தேடுதல் வேட்டை தொடர்கிறது என்றார். எனினும், நக்சலைட்டுகளிடம் அனுதாபம் கொண்டுள்ள கிராமத்தினரிடமிருந்து ஆத்திர மூட்டும் சம்பவங்கள் இருப்பினும், தம் பக்கம் எந்தவித அத்து மீறலும் செய்யப்படவில்லை என்றார். ஜீப் முன்பு அமர்ந்து கொண்ட பெண்டிர், போலீசார் தம் கடமையைச் செய்ய இயலாதவாறு தடுக்கப்பட்டனர் என்றார் அவர்.

இதனை சட்டம் ஒழுங்கு பிரச்சனையாகவே கருதுகின்றீர்களா? என்று அவரிடம் வினவியதற்கு, இது நூறு சதம் சமூக பொருளியல் பிரச்னையாதலால் அதற்கேற்பவே தீர்க்கப்பட வேண்டும் என்று திட்டவட்டமாக பதிலளித்தார்.

`மோதலில்' என்ற பெயரில் ரவீந்திரனை தீர்த்துக் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதை திட்டவட்டமாக கூற முடியுமா? என்று கேட்டபோது அவரின் பதில் நழுவும் வகையிலிருந்தது.

இரவீந்திரனுக்கு எதிரான வழக்குகளில் விபரங்களைக் கூறுமாறு கேட்டபோது, போலீஸ் தானாக பதிவு செய்த வழக்கெதுவும் இல்லை என்றும். அவருக்கெதிரான வழக்குகளெல்லாம் கிராமத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தந்த் புகார்களை வைத்து பதிவு செய்யப்பட்டவையே என்றார்.

சென்னை திரும்பும் வழியில் குழுவினரில் சிலர் வேலூரிலுள்ள டி.ஐ.ஜி. சி.வி. ராவின் முகாம் அலுவலக இல்லத்துக்கு அவரைக்காண சென்றனர். பெண் காவலர் தேர்வுப் பணியில் அவர் முனைந்திருந்ததால், இரவு 7.30 மணி வரை காத்திருந்தும், அவரைச் சந்திக்க முடியவில்லை.

### மோதல் குறித்து போலீஸ் தரப்பில் சொல்லப்படும் கதை:

பி.யு.சி.எல். மற்றும் இதர மனித உரிமை இயக்கங்கள் மற்றும் உண்மை அறியும் குழுவில் இடம் பெற்றுள்ள அமைப்புகள், தனிநபர்களுக்கோ-சொத்துக்களுக்கோ தீங்கு நேரும் வகையிலான எந்தவிதமான அரசியல் வன்முறையினை கண்டிப்பதுமில்லை, அதேநேரம் ஆதரிப்பதுமில்லை. ஆனால் அவை அரசாங்கத்திடம் வேண்டுபவை:

1. வன்முறையில் ஈடுபடும் யாரும் இந்த நாட்டின் சட்டப்படியே விசாரித்து தண்டிக்கப்படவேண்டும். இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 14 மற்றும் 21-க்குப் புறம்பான வகையில் அரசினால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திரவதைப்படுத்துவதோ நீதிக்குப் புறம்பான வகையில் தீர்த்துக் கட்டுவதோ நடைபெறக் கூடாது.

2. நக்சலைட்டு இயக்கம் போன்ற அரசியல் இயக்கம் ஒன்றினை, அது வன்முறையில் ஈடுபட்டாலுங்கூட, சட்டம்-ஒழுங்கு பிரச்னையாக நடத்தக்கூடாது. மாறாக, இப்பிரச்சனை ஆழப்படிந்துபோன சமூக ஒடுக்கு முறை மற்றும் சுரண்டலின் வெளிப்பாடாக கருதப்பட வேண்டியதாகும். வன்முறைக்கு காரணமானவர்கள் மீது சட்டரீதியான முன்னெச்சரிக்கைகளும் தண்டனைகளும் மேற்கொள்ளப்படும் போது, அரசியல், சமூக மற்றும் பொருளியல் தளத்தில் அணுகப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

மனித உரிமைக்கல்வி பெற்றிருப்பதாக கூறி மனித உரிமை கருத்தாக்கங்களை தாராளமாக பயன்படுத்தி பிரகடனங்கள் செய்யும் காவல்துறை அதிகாரிகளே மோசமான வகையில் மனித உரிமைகளை மீறிய தவறுகளை இழைக்கின்றனர்.

நக்சலைட் பிரச்னை சமாளிக்கப்படுகின்ற இந்தியாவின் பல மாநிலங்களிலும் கடந்த மூன்று பத்தாண்டுகளின் அனுபவமானது, நக்சலைட்டுகளுடனான மோதல் என்பது பின்வரும் விதத்தில் ஒருவகையாக அமைகின்றது.

ஆயுதந்தாங்கிய நக்சலைட்டுகளின் நடமாட்டம் குறித்த தகவல் கிடைத்ததும் காவல்துறை அணியொன்று அவர்களைப் பிடிக்க அனுப்பப்படும் அல்லது நக்சலைட் பிரதேசங்களில் அவர்களைத் தேடியவாறு ஒரு பிரிவு ஏற்கனவே ஈடுபட்டிருக்கும். நக்சலைட்டுகள் (ஆயுதந்தாங்கிய குழு அல்லது ஆயுதந்தாங்கிய ஒன்றிரண்டு பேர்) போலீசால் கண்டறியப்படுவர், அல்லது போலீசார் நக்சலைட்டுகளால் கண்டறியப்படுவர். முந்தையதில், நக்சலைட்டுகளை சரணடையுமாறு சட்ட ரீதியாக போலீசார் வேண்ட, அவர்களோ போலீசாரைக் கொல்வதற்காக துப்பாக்கியால் சுடுவர், வெடிப் பொருட்களை எறிவர். இரண்டாவது நிகழ்வானால், நக்சலைட்டுகள், போலீசாரைக் கொல்வதற்காக நேரிடையாகச் சுட்டுவிடுவார்கள், வெடிப்பொருட்களை எறிந்து விடுவார்கள். எவ்வகையிலும் அபாயத்துக்குள்ளாகும் போலீசார் தம் உயிரைக் காப்பதற்காக பதிலுக்குச் சுடுவர். சிறிது நேரம் கழித்து, நக்சலைட்டுகள் மறைந்துவிட்ட பிற்பாடு, போலீசார் சம்பவம் நிகழ்ந்த இடத்தை சோதிப்பார்கள். துப்பாக்கிகளும், எறிகுண்டுகளும் இதர வெடிப் பொருட்களும் தாங்கி, அராஜக வெளியீடுகளுடன், ஆயுதந்தாங்கிய நக்சலைட் தளத்திற்குரிய விசேடமான சீருடை அணிந்த நக்சலைட்டுகள் ஓரிருவரின் சடலங்களைக் கண்டறிவர். காட்டுப் பிரதேசத்தைப் பயன்படுத்தி சில நக்சலைட்டுகள் எப்படியேனும் தப்பி விடுவர்.

நம் நாட்டில் நிகழ்ந்துள்ள நூற்றுக்கணக்கான போலீஸ் தரப்பு மோதல்களெல்லாம் அநேகமாக ஒரே விதமானவை-ஒன்றிரண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதிவிலக்குகளில் சில போலீசார் கொல்லப்பட்டிருப்பர். இந்தக் கதையில் இரு அம்சங்கள் உண்டு. அவற்றைப் பிரித்துக்காட்ட விரும்புகிறோம்.

1. மோதலில் பலியானவர் முதலில் சுட்டிருப்பர், தற்காப்பின் பொருட்டு போலீஸ் பதிலுக்கு சுட்டிருக்கும்.

2. பலியானவர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட குற்றவியல் வழக்குகளில் தேடப்பட்ட ஆயுதந்தாங்கிய நக்சலைட்டாக இருப்பார்.

நக்சலைட்டுகளால் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்த்தப்படும் போதெல்லாம், அவர்களுக்கு அனுதாபங்காட்டுகின்ற அல்லது உதவி செய்கின்ற இளைஞர்களைப் பிடித்துச் சென்று, போலீஸ் பதிலடி கொடுக்கும். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் அவர்கள் சுடப்பட்டு இறந்து போவார்கள். குற்றமிழைத்த அதே நக்சலைட்டுகளுடன்தான் மோதல் நிகழ்ந்தது என்ற கதை பரப்பப்படும். பலியானவர் உடல்களில் நக்சலைட் சீருடைகள் அணிவிக்கப்பட்டு துப்பாக்கிகள், வெடிமருந்துகள் போன்றவை அருகே வைக்கப்படும் அல்லது திணித்து வைக்கப்படும் (வழக்கமாக வலது கையில்)-போலீஸ் தரப்பின் நியாயத்தை அறிவிப்பதற்காக. தம் உயிரைப் பணயம் வைத்து போராடிய போலீசாருடனான அபாயகர மோதலில் இறந்துபோன, பயங்கரமான, ஆயுதந்தாங்கிய நக்சலைட்டுகளைப் பார்ப்பதற்காக சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு பத்திரிகையாளரோ, தொலைக்காட்சி குழுவினரோ அழைத்து வரப்படுவர். பத்திரிகையாளருக்கு தரப்படும் விளக்கத்துடன், ஏதாவது மக்களின் நண்பர் சங்கம் அல்லது மக்கள் நலச் சங்கங்களால் முகவரியின்றி அச்சிடப்பட்ட துண்டறிக்கைகள் சேர்ந்திருக்கும். நக்சலைட்டு தொந்தரவிலிருந்து மக்களைப் பாதுகாத்ததற்காக போலீசாருக்கு அதில் நன்றி தெரிவிக்கப்படும்.

இரவீந்திரன் கொல்லப்பட்ட மோதலும் மேலே குறிப்பிட்ட இவ்வகை மாதிரியில் பொருந்திப்போவதே ஆகும். நடந்துள்ள ஒட்டுமொத்த நிகழ்வுக்கான சாட்சியங்களாக உள்ளூர்க்காரர் சிலர் போலீஸ் ஆவணங்களில் இடம் பெறுவது ஒன்றுதான் புதியது. மேலும் அதனைப் பற்றி பின்னர் விளக்குகிறோம்.

*முடிவுகள்:-*

1. தர்மபுரி மாவட்டத்தில் 26.12.99 அன்று இரு பேருந்துகள் எரிக்கப்பட்டன என்பது உண்மையே- ஒன்று, ஒகேனக்கல் சோதனைச்சாவடி அருகிலும் மற்றது, தர்மபுரி-திருப்பத்தூர் சாலையில் மோட்டுப்பட்டி அருகிலும். முதல் சம்பவம் தொடர்பான முதல் தகவல் அறிக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அடையாளந்தெரியாத 10 பேர் (நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்) என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இரண்டாவது சம்பவத்தில், தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த, 18-25 வயதைச் சேர்ந்த 6 வாலிபரும் 2 பெண்களும் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. கொடாம்பட்டி, பூதிப்பட்டி, நத்தம், வெள்ளாளப்பட்டி மற்றும் மத்தான்கோட்டையைச் சேர்ந்த பல ஆண்கள் இச் சம்பவங்களை காரணம் காட்டி போலீசால் கைது செய்யப்பட்டுள்ளனர். பேருந்து எரிப்பில் வேண்டப்படுவோரை தேடுதல் என்ற பெயரில் பகலிலும் இரவிலும் கிராமத்தவரை போலீசார் அச்சுறுத்தி வருகின்றனர், இரவில்கூட பெண்களை இம்சித்து வருகின்றனர். குற்றவியல் வழக்குகளில் கணக்கற்றவர்களை சம்பந்தப்படுத்துவதற்காக பேருந்து எரிப்பு சம்பவங்கள் பயன்படுத்தப்படுவதாகவே தோன்றுகிறது. குழு சென்றுவந்த பிரதேசங்களிலுள்ள எல்லாவகை இடதுசாரி இயக்கங்களையும் நசுக்கிவிடுவதில் போலீஸ் முனைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

3. போலீஸ் அச்சுறுத்தலுக்கு குழுவினர் சாட்சியங்களாக இருந்தனர். 19.01.2000 அன்று நாய்க்கன்கொட்டாயிலிருந்து வாலிபரும், சிறுவரும் பிடித்துப் போகப்பட்டது பற்றி மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

4. குழுவினர் வருகை புரிந்த கிராமங்கள் பலவிதமான சமூக-பொருளியல் சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளன - இவற்றுக்கு உடனடி நிவாரணம் தேவை.

5. ரவீந்திரன் கொல்லப்பட்ட மோதல் குறித்து ஆராய்ந்து அறியும் குழுவினரின் முயற்சிகள்-விசாரணை அறிக்கை, பிரேதப் பரிசோதனை அறிக்கை போன்ற தொடர்புடைய மருத்துவ-சட்ட ஆவணங்கள் கிடைக்காமையாலும், போலீசாரால் பயிற்றுவிக்கப்பட்ட சாத்திரமுட்லு மற்றும் பெருங்காடு கிராமத்தினரின் வாக்கு மூலங்களாலும்-தடைப்பட்டுள்ளன. எனினும் போலீஸ் ஆவணங்களில் ஏகப்பட்ட முரண்பாடுகள் இருப்பதை குழு கண்டறிந்துள்ளது. 'மோதலில்' நிகழ்ந்தபோது ரவீந்திரனுடன் இருந்த சிவா (எ) பார்த்திபனிடமிருந்து முற்றிலும் வேறான செய்தியை குழு பெற்றுள்ளது.

தர்மபுரி மாவட்டம், தேன்கனிகோட்டை காவல் ஆய்வாளர் ஏ. ராஜேந்திரன் கொடுத்துள்ள அறிக்கையின்படி பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் (10.01.2000 அன்றைய மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற 'எண் 27/2000) பின்வரும் அம்சங்கள் போலீசால் கூறப்பட்டுள்ளன.

அ) அரசுப் பேருந்துகள் எரிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ரவீந்திரன்(எ) சக்திவேல், ராமச்சந்திரன், வெங்கடேசன் மற்றும் பிறரை பிடிப்பதற்காக, தர்மபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுறுத்தலின்படி ஒரு போலீஸ் பிரிவு அமைக்கப்பட்டது. (குற்ற எண் 235/99, ஒகேனக்கல் காவல் நிலையம்). ஏ. ராஜேந்திரன், காவல் ஆய்வாளர், (தேன்கனிகோட்டை) தலைமையில் சுரேஷ்குமார், காவல் ஆய்வாளர், என். எஸ்.டி.. பிரிவு, (பொம்மிடி.) ஜெயபாலன், காவல் ஆய்வாளர், டி.என்.எஸ்.டி.எப். ரவிக்குமார், காவல் ஆய்வாளர்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(பாலக்கோடு.) குபேந்திரன், காவல் ஆய்வாளர் (இவரது பணியிடம் குறிப்பிடப்படவில்லை) மற்றும் டி.என்.எஸ்.டி.எப். யிலிருந்து போலீசார் உட்பட 17 பேர் கொண்டதாக அப்பிரிவு இருந்தது. (சில போலீசாரின் எண்களும் பெயர்களும் தரப்பட்டு, மற்ற போலீசாருக்கு எண்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன.)

ஆ) பெருங்காடு ஊர்க்கவுண்டர் மல்லப்பனின் பண்ணை வீட்டில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வர் தங்கியிருந்தனர் என்ற செய்தி கிடைத்ததும், சுற்றி வளைப்பதற்காக, போலீஸ் பிரிவு சுரேஷ்குமார், ராஜேந்திரன் மற்றும் குபேந்திரன் தலைமையிலாக மூன்றாக பிரிந்தது. ஒரு பிரிவு பெருங்காடு ஊர்க்கவுண்டரான மல்லப்பக்கவுண்டர், அதே கிராமத்து மந்திரிக்கவுண்டர் மாரப்பன், சண்முகம் மற்றும் பெல்லுஅள்ளி கிராமத்து டீக்கடை ராமன் மற்றும் பெருங்காட்டைச் சேர்ந்த வேறு சிலருடன் சேர்ந்துகொண்டு, தெற்கிலிருந்து வடக்குநோக்கி நகர்ந்தது. சுரேஷ்குமார், காவல் ஆய்வாளர், என்.எஸ்.டி. பிரிவு, தலைமையிலான இரண்டாவது பிரிவு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகர, ரவிக்குமார், காவல் ஆய்வாளர், பாலக்கோடு தலைமையிலான மூன்றாவது பிரிவு, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்தது.

இ) ஊர்க்கவுண்டரின் பண்ணை வீட்டில், ரவீந்திரன் (எ) சக்திவேல், வெங்கடேசன் மற்றும் சிவா (எ) பார்த்திபன் என்னும் மூவரை போலீசார் அடையாளம் கண்டு கொண்டனர்- இவர்களின் பெயர்கள் பின்னரே உறுதி செய்யப்பட்டன.

ஈ) சரணடையுமாறு அவர்கள் வற்புறுத்தப்பட, ஒவ்வொருவரும் கைத்துப்பாக்கியை எடுத்து, நக்சலைட் கோஷங்களை எழுப்பி, தப்ப முயன்றனர்.

உ) சரணடையுமாறு மீண்டும் அவர்கள் வற்புறுத்தப்பட, அவர்களோ கோஷங்கள் எழுப்பினர். சிவா (எ) பார்த்திபன் தன் கைத்துப்பாக்கியால் போலீஸ் மீது சுட்டார். போலீஸ் அவரை சுற்றி வளைத்தது.

ஊ) அப்போது ரவீந்திரன் (எ) சக்திவேல் மேற்குப்பக்கமாய் காட்டில் ஓடிக்கொண்டே போலீஸ்மீது சுட்டார். இன்னொருமுறை அவர்கள்மீது சுடுவதற்காக யுத்த மோதல் நிலையில் நின்றார். எஸ்.டி.எப். போலீஸ் எண் என்.கே-469 (சந்திரசேகரன்) தனது எஸ்.எல்.ஆர். ரக துப்பாக்கியால் ரவீந்திரனைச் சுட்டார். வலது பின்புறமாக குண்டடிப்பட்ட ரவீந்திரன் தன் கைத்துப்பாக்கியுடன் விழுந்தார்.

எ) மற்ற இருவரும் தப்பி ஓடிவிட்டனர். போலீசார் அவர்களைத் துரத்தினர். ஓடும்போது இருவரில் ஒருவர் தன் கைத்துப்பாக்கியை நழுவவிட்டுவிட்டு தப்பிவிட்டார். மற்றவர் போலீஸ்மீது சுட்டார். எண்.114 அருள் மற்றும் எண்.3382 சேகர் என்னும் போலீசார் பதிலுக்கு சுட்டனர். ஆனால் அவ்விருவரும் தப்பி ஓடிவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏ) இச்சம்பவம் 10.01.2000 அ காலை 10.30 மணிக்கு நடந்தது எனக் குறிக்கப்பட்டுள்ளது.

ஐ) சிவா (எ) பார்த்திபன் துப்பாக்கியும் குழாய் குண்டுகளும் வைத்திருந்தார் என கண்டறியப்பட்டது.

ஒ) சுடப்பட்ட நபர் வலப்புறத்தில் குண்டு காயத்துடன் இறந்து கிடந்தது பின்னர் கண்டறியப்பட்டது. அவரது கையில் ஒரு நாட்டு கைத்துப்பாக்கியும் அவரது பெல்ட்டில் இரு குழாய் குண்டுகளும் இருந்தன.

ஓ) குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரும் தம் பைகளை பண்ணை வீட்டின் மேற்குப்பக்கமாக தொலைவில் போட்டு வைத்திருந்தனர். பிச்சுவா, இரு சிறிய ரேடியோக்கள், டார்ச் லைட்டுகள், நோட்டீசுகள் மற்றும் துணிமணிகள் பைகளில் இருந்தன.

ஔ) போலீசாரால் பிடிக்கப்பட்ட சிவா (எ) பார்த்திபன் சம்பவம் நிகழ்ந்த இடத்திலேயே போலீஸ் காவலில் வைக்கப்பட்டார்.

ஃ) இரவீந்திரன் (எ) சக்திவேலின் உடலும் சம்பவம் நடந்த இடத்திலேயே போலீஸ் காவலில் வைக்கப்பட்டது.

இந்த முதல் தகவல் அறிக்கையில் கூறப்படும் போலீசாரின் கதையில் நிறைய முரண்பாடுகள் காணப்படுகின்றன:-

க) காவல் ஆய்வாளர் ராஜேந்திரன் பண்ணை வீட்டில் காணப்பட்டது மூவர்தான் என்கிறார் (அவர்களின் பெயர்களும் அடையாளங்களும் பின்னரே உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் - (இ)-னைப் பார்க்கவும்.

ங) திடீரென மூவர் நால்வராகின்றனர் - (ஒ) னைப் பார்க்கவும்.

ச) இரவீந்திரன் யுத்தமோதல் நிலையை மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது. கண்காணிப்பாளர் பி. கந்தசாமி குழுவினருக்கு விளக்கியபடி, சுடும்போது தன் உடலை சிறிது கூட தென்படாதவாறு வைத்துக்கொள்வதே அந்நிலை-ஆனால் இங்கோ அப்படி இப்படியாக ஓடிக்கொண்டே சுடுவதற்கு ஆயத்தமானார் எனப்படுகிறது. இவற்றையெல்லாம் செய்வதற்கு அவர் சக்திமானாக இருக்கவேண்டும். எனினும், போலீஸ் குண்டு அவரை வீழ்த்திவிட்டது!

ஞ) போலீசாரின் எஸ்.எல்.ஆர். ரக துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டு ரவீந்திரனின் வலது முதுகைத் தாக்கிற்று என்று முதலில் கூறுகிறார் காவல் ஆய்வாளர் ஏ. ராஜேந்திரன் (ஊ)-வைப் பார்க்கவும். ஆனால் இறந்து கிடந்த ரவீந்திரனைக் காணும் போலீசார், வலப்புறத்தில் (வலது மார்பில்) குண்டுக்காயம் இருப்பதைக் கண்டனர்- (ஒ)-வைப் பார்க்கவும். எனவே ரவீந்திரன் வலது மார்பில் சுடப்பட்டார் என்றாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட) இரவீந்திரனின் இறந்த உடலின் புகைப்படங்கள் இரு குண்டுக்காயங்களைக் காட்டுகின்றன. வலது மார்பில் சிறியதாயும் இடது முதுகில் பெரியதாயும் இரு காயங்கள் உள்ளன. வலது முதுகில் காயங்கள் எதுவும் இல்லை.

ண) முதல் தகவல் அறிக்கையில் போலீஸ் பிரிவுடன் சேர்ந்திருந்த போலீசாரைக் குறிப்பிடும் ஆரம்ப பகுதியில் 3382 எண்ணுள்ள போலீஸ் பற்றிக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் பின்னர் தப்பியோடியவர்கள் மீது பதிலுக்குச் சுட்டவர்களில் ஒருவர் 3382 எண்ணுள்ள சேகர் எனப்படுகிறது.

த) சிவா (எ) பார்த்திபனின் காவல் அறிக்கையில், காவல் ஆய்வாளர் குபேந்திரனின் பெயர் (தேடும் பிரிவில் இடம் பெற்றிருந்தவர்) குறிப்பிடப்படவில்லை.

ந) தப்பியோடியவர்கள் மீது சுட்ட இரு போலீசாரில் ஒருவர் எண் 114 அருள் என்று முதல் தகவல் அறிக்கை கூற, காவல் அறிக்கையோ அப்போலீஸ் எண். 224 (பெயர் கூறப்படவில்லை) என்கிறது.

ப) இறந்துபோன ரவீந்திரன் (எ) சக்திவேல், மக்கள் போர்ப்படையின் மையக்குழு உறுப்பினர் என்று முதல் தகவல் அறிக்கை கூற, காவல் அறிக்கையோ, மக்கள் போர்ப்படையின் அரசியல் குழு உறுப்பினர் என்கிறது.

**காவல் அறிக்கையும் சிவா (எ) பார்த்திபனின் வாக்கு மூலமும்:**

சிவா (எ) பார்த்திபன் தொடர்பான மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளரின் காவல் அறிக்கையில், மாரண்டஅள்ளி காவல் நிலையத்திற்கு முன்பாக, சம்பவ இடத்திலேயே விசாரிக்கப்படுகையில் தானாக அளித்த வாக்குமூலத்தில், மற்றவர்களுடன் சேர்ந்து இக்குற்றமிழைத்திருக்கும் சிவா பல்வேறு குற்றங்களிலும் தனக்கு தொடர்பு இருப்பதை ஒத்துக்கொண்டார். 10.01.2000 அன்று 18.00 மணிக்கு விசாரணைக்குப் பிறகு 20.30 மணிக்கு காவல் நிலையம் கொண்டுவரப்பட்டார் அவர்.

11.01.2000 நாளிட்ட மாலை மலரில் (சேலம் மற்றும் பாண்டிச்சேரி பதிப்புகள்) வெளியான புகைப்படங்களில் சிவா கண்கள் கட்டப்பட்டிருக்கிறார். தன்னை விசாரிக்கும் போலீசாரை அடையாளம் கண்டுவிடக்கூடாது என்பதற்காக அவரின் கண்கள் கட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சேலம் மத்திய சிறையில் இப்போது அடைக்கப்பட்டுள்ள சிவா (எ) பார்த்திபன் கையெழுத்திட்டு அளித்துள்ள வாக்குமூலத்தில் கூறுவது பின்வருமாறு ;

1) 6.01.2000 அன்று சிவா, இறந்துபோன ரவீந்திரன், ராமச்சந்திரன் மற்றும் குமார் ஆகியோர் பெருங்காட்டுப்பள்ளத்தில் பிற்பகல் 7 மணி வாக்கில் பிரச்சாரப் பணிகள் செய்து கொண்டிருந்தனர். மக்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துயரங்களை கேட்டறிவதற்காக இரவுப்பொழுதை அங்கேயே கழித்தனர். 7.01.2000 அன்று காலையில் உணவுக்காக ஊர்க்கவுண்டரின் வீட்டுக்கு நால்வரும் போனார்கள். சாப்பிட்டுவிட்டு வெளியேறும்போது முற்பகல் 11.30 மணிவாக்கில் எஸ்.டி.எப். போலீசார் சுமார் 25 பேர் அவர்கள் நால்வரையும் சூழ்ந்து கொண்டனர். முழக்கமிட்ட சிவாவை போலீசார் அடித்தனர். மற்ற மூவரும் ஓடத் தொடங்கினர். ரவீந்திரன் பிடிபட்டார். சிவாவையும் ரவீந்திரனையும் எஸ்.டி.எப். ஆட்கள் தம் பூட்சுகளால் மிதித்தனர். சித்திரவதை செய்தபின் அவர்கள் கைகளைப் பின்புறமாக கட்டி, கண்களையும் கட்டி பிற்பகல் 2 மணிக்கு அடையாளம் தெரியாத இடத்துக்கு கொண்டு சென்றனர். 7.01.2000 இரவிலிருந்து 9.01.2000 காலை வரையிலும் கண்கட்டுகளை அவிழ்த்துவிடாத போலீசார், கைகளும் கட்டப்பட்டிருந்த நிலையிலேயே அடித்தனர். அவரின் முழங்கால் மற்றும் கணுக்கால் மூட்டுக்களில் துப்பாக்கியின் அடிப்பகுதியால் தாக்கினர். அதனால் உண்டான காயங்கள் 20.01.2000 வரையும் இருந்தது. ஆபாச வார்த்தைகளில் திட்டினர். இவ்விரு நாட்களும் கண்கள் கட்டப்பட்டிருந்ததால் எங்கே வைக்கப்பட்டிருந்தார் என்பதை அவரால் அறியமுடியவில்லை.

2. இரவீந்திரனும் இதே சித்திரவதைகளுக்கு உள்ளானார். சிவாவின் கண்கள் கட்டப்பட்டிருந்தாலும் வேதனையில் இரவீந்திரன் கூச்சலிட்டதை கேட்க முடிந்தது. அவர்களை வதைத்தவர்கள் க்யூ.பிரிவு போலீசார், குறிப்பாக வேலு என்பவர். அவரது பதவி விபரம் தெரியவில்லை.

3) 10.01.2000 அன்று மீண்டும் அவரும் ரவீந்திரனும் கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே பெருங்காட்டு பள்ளம் ஊர்க்கவுண்டரின் வீட்டருகே கொண்டுவரப்பட்டனர். அப்போது அவர்களை ஓடுமாறு போலீசார் பணித்தனர்- இருவரும் மறுத்தனர். சிறிது நேரத்தில் 5 குண்டு சப்தங்களை சிவா கேட்டார். ஒருவர் கதை முடிந்தது என்று போலீசார் கூறியதை சிவா கேட்டார். மற்ற இருவரின் கதையும் முடிக்கப்பட வேண்டும் என அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், வேறு சில போலீசாரின் பூட்ஸ் காலடி சப்தங்களை சிவா கேட்க முடிந்தது. சிவாவை சுடக்கூடாது என அவர்களில் ஒருவர் கூறினார். அவர் உயிர் தப்பியது இப்படித்தான்.

6) இரவு 7 மணிவரையிலும் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் அவர் அமர்ந்திருக்குமாறு செய்யப்பட்டார். அதுவரையிலும் அவர் கண்கள் கட்டப்பட்டிருந்தன. அப்போது போலீசார் அணி அணியாக வந்து அவரை விசாரித்தனர். இரவு 7 மணி வாக்கில் மாரண்டஅள்ளி காவல் நிலையத்துக்கு கொண்டு செல்லப்படும்போது, ரவீந்திரனின் உடல் (மார்பில் குண்டுக் காயத்துடன்) எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டார் சிவா. காவல் நிலையத்துக்கு சிவாவை கொண்டுவரும்போது அவருடன் பேசுவதற்கு பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவரை புகைப்படங்கள் எடுக்க மட்டுமே அனுமதித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5) 10.01.2000 அன்று இரவெல்லாம் அவரைத் தூங்கவிடவில்லை போலீசார். டி.ஐ.ஜி. ராவ், கண்காணிப்பாளர் கந்தசாமி, உளவுப் பிரிவினர் மூவர் மற்றும் க்யூ.பிரிவு அணியினர் ஆகியோர் தொடர்ந்து விசாரித்தனர். ரவீந்திரனின் கதியையே சந்திக்க நேரும் என்று மிரட்டப்பட்டு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட சிவா நிர்ப்பந்திக்கப்பட்டார். 11.01.2000 அன்று மாலை 5 மணிக்கு விலங்கு பூட்டியபடி பாலக்கோடு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார் அவர். நீதித்துறை நடுவர் எதுவும் கேட்கவில்லை. 25.01.2000 வரையிலும் நீதிமன்றக் காவலில் வைக்கப்படுவதாக மாத்திரம் கூறினார்.

***குழுவின் கோரிக்கைகள் :-***

மோதலின் போதான சாவு ஒவ்வொன்றும் தற்காப்பின் பொருட்டு நிகழ்ந்து விடுவதாக போலீஸ் கூறிக் கொள்கிறது. எந்தவொரு மோதலின் முடிவானாலும், 'மோதலில்' பங்கேற்ற போலீஸ் பிரிவு உள்ளூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யும் புகார், வெடிமருந்துகள், ஆயுதங்கள், சட்டவிரோதமான கூட்டம் போன்ற இதர பிரிவுகளுடன் சேர்த்து ஐ.பி.சி. 307 பிரிவின் கீழ் கொண்டுவரப்படும். சாராம்சத்தில், பதிவு செய்யப்பட்ட குற்றமானது, போலீஸ் மீதான நக்சலைட்டுகளின் கொலை முயற்சியாகும். அதனால் தற்காப்புக்காக போலீசார் சுட நேர்ந்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நக்சலைட்டுகள் இறக்க நேர்ந்தது என்று சொல்லப்படும்.

சட்டப்படி இச்சம்பவம் ஐ.பி.சி. பிரிவு 307 மற்றும் 302-ன்படி முறையே இரு குற்றங்களாக பதிவு செய்யப்பட வேண்டும். ஒன்று (நக்சலைட்டுகளால்) கொலை முயற்சி, மற்றது, (காவல் துறையினரால்) தற்காப்பின் பொருட்டு கொலையில் முடிந்த குற்றம். சிஆர்.பி.சி-யின் 5-வது அத்தியாயத்தின்படி (நபர்களை கைது செய்தல்), 10-இன்படி (பொது அமைதி மற்றும் ஒழுங்கு நிலைநாட்டல்), குறிப்பாக பிரிவு 129(2) படி - அப்போது தமிழ்நாடு போலீஸ் கையேட்டில் (நிலையான உத்தரவுகள்) விதிக்கப்பட்டுள்ள முறைகள் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும். சுட நேர்ந்ததை போலீசார் நியாயப்படுத்தவும் முடியும். அல்லது ஐ.பி.சி அத்தியாயம் 4 (பொது விதி விலக்குகள்) படி, குறிப்பாக, சாவுக்கு காரணமாகும் தனிப்பட்ட குற்றம் தொடர்பான 100வது பிரிவின்படி நியாயப்படுத்த முடியும்.

ஐ.பி.சி-யின் அத்தியாயம் 4-னை போலீசார் பயன்படுத்தும்போது இந்திய சாட்சி சட்டத்தின் 105-வது பிரிவால் கட்டுப்படுத்தப்படுவார்கள் - அப்பிரிவின்படி, ஐ.பி.சி.-யின் 4-வது அத்தியாயத்தின் கீழ் பொது விதிவிலக்கை கோருகின்ற எவரும், நீதிமன்றம் திருப்தியுறும் வகையில், விதிவிலக்குக்குச் சாதகமாக நிகழ்வின் சாத்தியப்பாடுகளை நிறுவிக்காட்டும் கடப்பாட்டை கொண்டு விடுகிறார்.

இவ்வாறு, ஒவ்வொரு மோதலும் ஐ.பி.சி-இன் 302வது பிரிவின் கீழ் போலீசுக்கு எதிரானதாக பதிவு செய்யப்பட வேண்டும், தொடர்புடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போலீசார் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். அப்போது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீசாருக்கு, தற்காப்புக்கு ஆதரவாக கருதுகோள்களை முன் வைப்பது கடமையாகிறது.

தமிழ்நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர், சட்டரீதியான வழிமுறைகளை பின்பற்றுவதில்லை. மோதல் கொலைகள் தொடர்பான முதல் தகவல் அறிக்கைகள் ஐ.பி.சி 302-வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுவதுமில்லை, விசாரணை மேற்கொள்ளப்படுவதுமில்லை. தம் நடவடிக்கைகளுக்கு தீர்ப்புரைப்பவர்களாக போலீசாரே மாறிவிடுகின்றனர். போலீஸ் செய்யும் குற்றங்களை பதிவு செய்யாது விடுவதும், முறையான விசாரணை இல்லாதிருப்பதும் நடைமுறைகளை மீறுவது மட்டுமல்ல, அரசியல் சட்டத்தின் 21-வது பிரிவான அடிப்படை உரிமை மற்றும் 14-வது பிரிவான சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பவற்றை மீறுவதும் ஆகும். சி.ஆர்.பி.சி.-இன் 176வது பிரிவின் கீழ் நீதிமன்ற நடுவர் விசாரணைகள் தன்னிச்சையான போலீஸ் நடவடிக்கையை கட்டுப்படுத்துவதில் ஒரு வழியாகும். 1983 திருத்தமானது, போலீஸ் காவலில் நேரும் ஒவ்வொரு சாவுக்கும் விசாரணை செய்வது கட்டாயமென நீதிமன்ற நடுவருக்கு விதிக்கின்றது. விசாரணைகள் முடிக்கப்பெறாத நேர்வுகள் உண்டு. முடிக்கப்பெற்றால், விசாரணை அறிக்கைகள் பொது மக்களின் முன் வைக்கப்படுவதில்லை அல்லது நிறைவேற்றப்படுவதில்லை. எல்லாச் சமயத்திலும் சாட்சியங்கள் போலீசாரால் அச்சுறுத்தப்படுகின்றனர், நக்சலைட் எதிர்ப்பு நடவடிக்கைக்குள்ளான பிரதேசத்தின் மக்களெல்லாம் பீதிக்குள்ளாகின்றனர், விசாரணையின்போது சாட்சியம் கூற அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. போலீசால் கொண்டுவரப்படும் சிலர் போலீஸ் தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் கூற நீதித்துறை நடுவரின் முன்பு நிறுத்தப்படுவர். போலீசுக்குப் பாதகமான வகையில் சாட்சியளிக்க எவரேனும் முன்வரும்போதுகூட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை, அனுமதிக்கப்படும்போது கூட விசாரணை அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் முக்கியமான சில பார்வைகளையும் பரிந்துரைகளையும் அரசின் முன் வைத்துள்ளது.

1. மோதல் சாவுக்குப் பின்னர் இறந்து போனவரை குற்றம் சாட்டப்பட்டவராக காட்டுதல், ஐ.பி.சி.-யின் 307 வது பிரிவின் கீழ் அவருக்கெதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல், குற்றம் சாட்டப்பட்டவர் இறந்து போனதால் வழக்கினை முடிவு கட்டுதல் ஆகியவை சட்ட வழிமுறைகளுக்கு முரணானதாகும்.

2. மோதல் கொலை வழக்கு ஒவ்வொன்றுக்கும் காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலரின் முறையான விசாரணை, சிஆர்.பி.சி. பிரிவுகள் 154, 170,173 மற்றும் 190-களின் கீழ் அத்தியாவசியமானதாகும்.

www.tamilarangam.net

3. இந்திய சாட்சி சட்டத்தின் பிரிவு 105-இன்படி தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும்.

4. ஒவ்வொரு கொலையும், தற்காப்புக்காக நேர்ந்தாலும் கூட குற்றஞ்சாட்டுவதற்குரியதே, விசாரிக்கப்பட வேண்டியதே, ஒவ்வொரு மோதல் சாவிலும், மாநில சி.ஐ.டி அல்லது தனி புலனாய்வு பிரிவினர் மூலம் விசாரணை செய்வதற்கென பொது உத்தரவு ஒன்றினை மாநில அரசாங்கம் வெளியிட வேண்டுமென்று ஆணையத்தால் பரிந்துரைக்கப்படுகிறது.

இவற்றை மனதில் கொண்டு, பல்வேறு மனித உரிமை மற்றும் பாதுகாப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த உண்மை அறியும் குழு, தமிழ்நாடு அரசாங்கத்திடம் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றது.

1. குண்டுக்காயமுற்ற ரவீந்திரனின் குறிப்பான உடல் பகுதி தொடர்பான போலீஸ் ஆவணங்களின் குளறுபடிகளே, மோதல் குறித்த போலீஸ் தரப்பு செய்தி கலப்படமற்ற பொய் என்பதை நிரூபணம் செய்ய போதுமானவையாகும். இந்நடவடிக்கையில் பங்கேற்ற போலீசாரை ஐ.பி.சி-யின் 302-வது பிரிவின் கீழ் பதிவு செய்து கைது செய்து விசாரிக்க வேண்டும்.

4. சிவா (எ) பார்த்திபனை கண்களைக் கட்டி, மோதலுக்குப் பின் பல மணி நேரங்களாக அப்படியே வைத்திருந்தது மூன்றாந்தர சித்திரவதையாகும் (உடலுக்கும் மனத்திற்கும்). அவரின் வாக்கு மூலத்தின்படி, அவரும் இறந்துபோன ரவீந்திரனும் 7.01.2000 அன்று கைதாகி, கண்கள் கட்டப்பட்டபடி அடையாளந்தெரியாத இடத்திற்கு கொண்டு போகப்பட்டு, சித்திரவதைப்படுத்தப் பட்டுள்ளனர். ஒப்புதல் வாக்குமூலம் தருமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாம் சித்திரவதையாகும், சட்டத்திற்குப் புறம்பானதாகும். இம்மூன்றாந்தர வதைக்குப் பொறுப்பான போலீசாரை உடனடியாக தற்காலிக பணி நீக்கம் செய்து, விசாரணைக்கு கொண்டுவர வேண்டும். சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சிவாவுக்கு போதுமான இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்.

3. சிவா (எ) பார்த்திபனுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும்போது, தேடுதல் மற்றும் மோதல் நடவடிக்கையில் ஈடுபட்ட அனைத்து போலீசாரின் பெயர்களும், பதவிகளும், காவல் நிலையங்களும், எண்களும் தரப்பட வேண்டும். முதல் தகவல் அறிக்கைக்கும் காவல் அறிக்கைக்குமிடையே சில போலீசாரது பெயர்களைப் பொறுத்தவரையில் உள்ள முரண்பாடுகள் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படும் காவல் ஆய்வாளர் குபேந்திரனின் பெயர் காவல் அறிக்கையில் இல்லை.

4. மக்கள் மற்றும் மனித உரிமை கழகங்கள் இந்தியாவெங்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிக்கடி வற்புறுத்திவரும் கோரிக்கையை தெளிவு படுத்த விரும்புகின்றது-

அ) டி.கே. பாசு-இந்திய யூனியன் வழக்கில் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புகள் போலீசாரால் கறாராகப் பின்பற்றப்படல் வேண்டும்.

ஆ) விசாரணை அறிக்கைகளும், பிரேதப் பரிசோதனை அறிக்கைகளும் பொது ஆவணங்களாக்கப்பட்டு, குறைந்த கட்டணத்தில் பொது மக்களுக்கு கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும்.


இ) அரசு மருத்துவர்களின் தொழிற் திறனை சந்தேகிக்காத குழுவினர், பிரேதப் பரிசோதனை செய்யும் போது அதிகப்படியான அளவில், அரசியல் மற்றும் அரசாங்க நெருக்கடிகளுக்கிடையே அவர்கள் பணியாற்ற வேண்டியிருப்பதையும் குழுவினர் உணர்கின்றனர்.

எனவே, பிரேதப் பரிசோதனை செய்யப்படும்போது, மனித உரிமை கழகங்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளால் தெரிவு செய்யப்பட்ட இரு மருத்துவர்களுடன் இறந்தவரின் குடும்பத்தினர் ஒருவரும் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி வருகின்றன. மூன்றாவது அம்சம் கிடைக்கச் செய்வதை இது உறுதிப்படுத்தும்.


ஒப்பம்

1. கே. மனோகரன், அமைப்பாளர்
2. டாக்டர் பி. சிவக்குமார்,
3. டி.எஸ்.எஸ். மணி,
4. ஷீலு,
5. சந்திரா,
6. கோ. சுகுமாரன்,
7. டி. கோபாலகிருஷ்ணன்,
8. பி. சந்திரன்,
9. எஸ். கோபால்,
10. பேரா. சி. பிரசாத்,
11. பி. சவுத்ரி,
12. சி. ஸ்ரீராம்,
13. ஜி.போஜகுமார்,
14. ஆர். முருகானந்தம்,
15. பி. நாராயணசாமி,
16. தமயந்தி,
17. ஏ. செல்வரத்தினம்,

www.tamilarangam.net



www.tamilarangam.net



www.tamilarangam.net



தோழர். ஷ்யாம்

மைய அமைப்புக்குழு
உறுப்பினர்
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்
மக்கள் போர்ப்படை



தோழர். மகேஷ்

செயலர். ஆந்திர பிரதேச
அமைப்புக்குழு
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்
மக்கள் போர்ப்படை



தோழர். முரளி

செயலர். வட தெலுங்கானா
மண்டல சிறப்பு அமைப்புக்குழு
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்
மக்கள் போர்ப்படை

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொய்யூரு `மோதல்' குறித்த அறிக்கை

சரியாக உலக மனித உரிமை தினத்திற்கு ஒரு வாரம் முன்பு டிசம்பர் 2ஆம் தேதி மாலை 4-30 மணிக்கும், 5-00 மணிக்கும் ஆந்திரா மின்னணு ஊடகங்கள் ஒரு செய்தியை பரப்பின. பத்திரிகை மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் `மோதல்' பற்றிய செய்திகள் ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருப்பதை ஆந்திர மக்கள் அறிவர். ஆனால் இந்த மோதல் சம்பவங்கள் பெரும்பாலும் பொய்யான செய்தியாகவும், உண்மையில் காவல்துறையினரின் படுகொலைகளாகவே இருப்பதாக மக்களின் கருத்து உள்ளது. கொய்யூரு காட்டுப் பகுதியில் போலீசுடனான ஒரு கடுமையான `மோதலில்' ஒரு நக்சலைட்கள் குழு ஈடுபட்டபோது நான்கு நக்சலைட்கள் இறந்ததாக தொலைக்காட்சி அறிவித்தது. கொல்லப்பட்டவர்கள், நல்ல ஆதி ரெட்டி(எ)ஷியாம், (மைய அமைப்புக் குழு உறுப்பினர், இ.க.க., மா.லெ., மக்கள் போர்ப்படை), எர்ரம் ரெட்டி சந்தோஷ் ரெட்டி (எ) மகேஷ் (செயலர், ஆந்திர பிரதேச அமைப்புக்குழு), சீலம் நரேஷ் (எ) முரளி (வடதெலுங்கானா மண்டல சிறப்பு அமைப்புக்குழு) என காவல்துறை `அடையாளம் காட்டியது. நான்காவது நபர் காவல் துறையால் அடையாளம் காட்டப்படவில்லை. அவர் மக்கள் போர்ப் படை தமிழ்நாடு பிரிவின் செயலராகவோ அல்லது எல்டிடிஇ-யின் உயர்மட்டத் தலைவராகவோ இருக்கக் கூடும் என்ற வதந்தி மத்திய உளவுத்துறை கொடுத்த தகவலின் அடிப்படையில் பரப்பப்பட்டது.

இந்த பொருத்தமற்ற ஐயத்திற்கிடமான முறையில் மக்கள் போர்ப்படையின் உயர்மட்ட தலைவர்கள் மூவர் `மோதல்' என்ற பெயரில் கொல்லப்பட்ட சம்பவமானது அனைத்து அரசியல் கட்சிகள், மக்கள் குடியுரிமை மற்றும் சனநாயக அமைப்புகள் ஆகியவற்றின் ஒட்டு மொத்த கண்டனத்திற்குள்ளானது. இ.க.க., மா.லெ., ம.போ.படை செயலர் பத்திரிக்கைகளுக்கு விடுத்த அறிக்கையானது கீழ்கண்ட செய்தியினை தெரிவித்தது. டிசம்பர் முதல் தேதியன்று ஆந்திர மற்றும் வட தெலுங்கானாவிலுள்ள கட்சி அமைப்புகளுக்கு இடையேயான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருங்கிணைப்பில் உள்ள பிரச்சனைகளை விவாதிக்க மூன்று தலைவர்களும் பெங்களூர் வந்தனர். கோவிந்தரெட்டி என்பவரின் பராமரிப்பிலிருந்த மறைவிடம் ஒன்றில் சந்திப்பு நடைபெற்றது.

பெங்களூர் பனசங்கரி என்னுமிடத்திற்கு செல்வதற்காக எவற்றையும் சந்தேகிக்காத தோழர்கள் சருக்கு கேட் பஸ் ஸ்டாப்பில் இறங்கிய போதே போலீஸ் தயாரானது. அங்கு பிற்பகலில் கோவிந்த ரெட்டி இல்லத்தில், மயக்கமடையக்கூடிய தேநீரையோ உணவையோ தோழர்கள் உட்கொள்ள வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. பின் மூன்று தலைவர்களும் கைது செய்யப்பட்டு பெங்களூரிலிருந்து வான் வழியே ஐதராபாத் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அன்று (டிசம்பர் 1) இரவு முழுவதும் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் டிசம்பர் 2, 1999 அன்று கொய்யூரு காட்டுப்பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். இதுபோன்ற புரட்சிகர அமைப்புகளின் தலைவர்களை அவ்வப்போது அழித்தொழிப்பதற்காக ஆந்திர அரசு, போலீசையும் கிரேஹவுண்ட்ஸ் (வேட்டை நாய் பிரிவு) என்ற படையையும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. `மோதல்' என்றழைக்கப்படும் இந்த படுகொலைகளை திறமையாக செய்வதற்காகவும் இதில் பங்கேற்கும் போலீசாருக்கும் ஊக்கமளிப்பதற்காகவும் விரைவான பதவி உயர்வு, பண அன்பளிப்புகள் மற்றும் `மோதல்' நடந்த இடத்தில் நக்சலைட்டுகளிடமிருந்து கைப்பற்றப்படும் பணத்தை பிரித்துக் கொடுத்தல் போன்ற செயல்பாடுகளை ஆந்திர அரசு மேற்கொண்டு வருகிறது. தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் `மோதல்'கள் என்ற போர்வையில் நக்சலைட் தலைவர்களை இல்லாதொழித்து அதன் நடவடிக்கைகளை முடக்குவதே அரசின் நோக்கம் என்பது கொய்யூரு `மோதல்' சம்பவத்திலிருந்து தெளிவாக தெரிகிறது.

இதனாலேயே இச்சம்பவம் குறித்து ஆராய ஓர் உண்மை அறியும் குழுவை அமைக்க ஆ.பி.ம.உ.கு -விற்கு மிகுந்த அவசியமாகிறது. இக்குழு இந்தியாவிலுள்ள மக்கள் குடியுரிமை அமைப்புகள் இணைந்து உருவாக்கப்பட்டது.

இந்த உண்மையறியும் கூட்டுக்குழுவில் பங்கேற்ற மனித உரிமை அமைப்புகள்:

1. மக்கள் சனநாயக முன்னணி
   People`s Democretic Front, Karnataka.(PDF)
2. மக்கள் குடியுரிமைக் கழகம்
   People`s Union of Civil Liberties, Tamilnadu - Pondy.(PUCL)
3. சனநாயக உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு
   Commitee for Protection of Democretic Rights, (CPDR)
4. லோக்சா அக் - சங்காதனா Lokshah Hakk Sangathana, Maharashtra. (LHS)
5. ஒருங்கிணைந்த மனித உரிமை அமைப்பு
   Co-Ordination of Human Rights Organisation, Kerala. (CHRO)
6. தேசிய சனநாயக முன்னணி National Democretic Front, Kerala. (NDF)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்.எச்.எஸ்-சும் சி.பி.டி.ஆர்-உம் அகில இந்திய ஜனநாயக உரிமைகள் அமைப்புகளின் கூட்டமைப்பின் உறுப்பினர்களாகும்.

கொய்யூரு 'மோதல்' சம்பவம் தொடர்பான சூழ்நிலைகள் மற்றும் உண்மை ஆகியவற்றை ஆய்வு செய்யவும், உறுதிப்படுத்தவும் உண்மையறியும் கூட்டுக்குழு 24 டிசம்பர் அன்று பெங்களூர் சென்றிருந்தது. அப்போது, நக்சலைட் தலைவர்கள் நால்வர் போலீசாரால் பிடித்துச் செல்லப்பட்டதான அப்பகுதியில் அச்சத்துடனிருந்த அக்கம் பக்கத்தவருடன் குழு பேசியது. இப்பகுதி ஜெபி நகர் காவல் நிலைய துணை ஆய்வாளர் மற்றும் நகர காவல்துறை ஆணையர் ஆகியோரிடமும் குழு நேர்காணல் நடத்தியது. 25ஆம் தேதி குழு ஐதராபாத் சென்றடைந்தது. 'மோதல்' நடை பெற்றதாகக் கூறப்பட்ட கொய்யூரு காட்டுப்பகுதிக்கு சென்று சோதனை செய்ய முயன்றது. ஆனால் காட்டுப்பகுதிக்கு வெளியே 70 கி.மீ. தூரத்திலுள்ள மத்தானி என்ற இடத்திலேயே போலீசார் குழுவைத் தடுத்து நிறுத்தி, குழு சம்பவ இடத்தை பார்வையிட முடியாமல் செய்து விட்டனர். மக்களுக்கும் (நக்சலைட் வன்முறையால் பாதிக்கப்பட்டோர்) குழு உறுப்பினர்களுக்குமிடையே வாய்சண்டை அங்கே திட்டமிட்டு போலீசாரால் உருவாக்கப்பட்டது. அவர்கள் குழுவினரை சூழ்ந்துகொண்டு முற்றுகையிட்டதைப் போன்றதொரு தோற்றத்தை போலீசார் ஏற்படுத்தினர். இந்த இக்கட்டான நிலையில் 2 மணி நேரத்திற்கு பின் குழுவினர் சித்திப்பேட் என்ற இடத்திற்கு சென்றனர். 26 ஆம் தேதி கொல்லப்பட்ட நான்காவது நபர் சிங்கம் லட்சுமி ராஜ்ஜியம் என்பவரது சொந்த கிராமமான கெர்ஜெனபல்லியை குழு சென்றடைந்தது. போலீசாரால் அவர் அருண் என்றழைக்கப்பட்டார். கடைசியாக இச்சம்பவம் தொடர்பாக பெங்களூர் மற்றும் கரீம்நகர் பத்திரிக்கையாளர்களிடம் பேசியதன் மூலமாக சில முக்கிய விஷயங்களை குழு சரிபார்த்துக் கொண்டது.

இவ்வாறான திக்குமுக்காடச் செய்யும் நிலைமையில் போலீசாரிடமிருந்து தடைக்கற்களையும், மாறுபட்ட சூழ்நிலையையுமே குழு கண்டது. கிராமங்களில் போலீஸ் பயங்கரத்தை விதைத்திருந்தது. இருப்பினும் குழு தனது புலனாய்வை வெற்றிகரமாக முழுவதுமாக முடித்தது. பொய்மையின் வலையில் சிக்கியிருந்த நான்காவது நபர் பற்றிய உண்மையை கொண்டுவரவும், நமது பணியை முழுவதுமாக முடிக்கவும் உதவிய-உற்சாகமளித்த அனைவருக்கும் குழு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டது

**போலீசின் வழக்கமான கதை:**

டிசம்பர் 2-ஆம் தேதி அன்று கொய்யூரு மோதல் தொடர்பான விவரங்களை ஒரு பத்திரிக்கையாளர் சந்திப்பு மூலமாக திரு. எச்.ஜே.தோரா அவர்கள் கூறியதாவது (ஆந்திர காவல்துறை தலைமை இயக்குனர்), தண்டகாரண்ய காட்டுப்பகுதியிலுள்ள பெரிய முகாமில் ஒரு சந்திப்பிற்கு பின்னர் மக்கள் போர்ப்படையைச் சேர்ந்த தலைவர்கள் தங்களது வழக்கமான இருப்பிட முகாம்களுக்கு திரும்பிக் கொண்டிருப்பதான தகவல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்று போலீசுக்குக் கிடைத்தது. இத்தகவலின் அடிப்படையில் சிறப்பு போலீசு குழுக்கள் கடந்த இரண்டு நாட்களாக அடிலாபாத், கரீம் நகர், வாரங்கல், கம்மம் மாவட்டங்களில் செயலில் இறக்கிவிடப்பட்டன. இந்த போலீசு குழுக்களில் ஒன்று தெடிசெர்லா பகுதியில் இரண்டாம் தேதி காலை 25 பேர் அடங்கிய நக்சலைட் குழு ஒன்று இருப்பதை கண்டறிந்தது- உடனே இரு பக்கங்களிலும் துப்பாக்கி சூடுகள் பறந்தன. முடிவில் காலை 11 மணியளவில் இம் மோதலில் நக்சலைட் அமைப்பினர் நால்வர் இறந்து கிடப்பதாக போலீசு கண்டறிந்தது. அந்த இடத்திலிருந்து ஒரு ஏ.கே. 47இரக துப்பாக்கி, இரண்டு தோட்டா தொகுப்புகள், 45 கோல்ட்டு பிஸ்டல் ஒன்று, இரண்டு 45 இரக ரிவால்வர்கள், கையெறிகுண்டுகள், கட்சி வெளியீடுகள், மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கரீம் நகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. நளினாபாத்திடம் குழுவினர் பேசியபோது டி.ஜி.பி. யால் சொல்லப்பட்ட கதையே அட்சரம் பிசகாமல் ஒப்புவித்தார். கொல்லப்பட்ட நான்காவது நபர் சிங்கம் லட்சுமிராஜ்ஜியம் என்கிற அருண் என்றும், அவர் கரீம் நகர் மாவட்டம், எல்லாரெட்டிப்பேட்டை மண்டலம், கெர்ஜெனப்பள்ளி கிராமத்தை சேர்ந்தவர் என்றும் அவர் தெரிவித்தார். நம்புவதற்கு மிக எளிமையாக உள்ள போலீசின் கதை பல கேள்விகளை எழுப்பி பதிலளிக்க முயல்கிறது. சம்பவம் நடந்த சூழலும் தன்மையும் கீழ்கண்ட ஐயங்களை குழுவுக்கு தோற்றுவிக்கிறது.

- தேசிய நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கி.மீ. தூரத்திலேயே- அம்மாவட்டத்திலேயே போலீசு கடுமையாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளது என்று அறிந்தும் நக்சலைட்டுகளோ அதன் தலைவர்களோ அங்கு தென்படுவர் என்பது நடக்கக்கூடியதாகவோ செய்யத்தக்கதாகவோ இருக்கும் என குழு கருதவில்லை.

- ஐந்து மணி நேரம் 18 பேர் கொண்ட போலீசு குழுவிற்கும் 25 பேர் கொண்ட நக்சலைட் குழுவிற்கும் இடையே உண்மையாக `மோதல்' நடந்தது என்று நாம் கொண்டால் ஒரு சிறிய காயம் - பாதிப்பு எதுவும் அடையாமல் போலீசார் தப்பியது நம்ப முடியாததாகவே இருக்கிறது.

- துப்பாக்கி சண்டையின் போதே நக்சலைட்டுகள் இறந்தார்கள் என்று கொள்வோமாயின் எப்படி இறந்தவர்கள் உடல்களில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன?

- போலீசு ஏன் இறந்தவர்களின் உடல்களை உடனே எரியுட்டியது? மனித உரிமை ஆர்வலர்கள், தலைவர்கள் இறந்த உடல்களை சோதனை செய்ய முடியாமல் ஏன் தடுத்தது?

- போலீசாரின் கதை நம்புவதற்கு முடியாததாகவும் அவர்களின் செயல்பாடுகளால் `மோதல்' பற்றிய சந்தேகங்கள் வலுப்பட்டு கொண்டேயும் வருகிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல்**

1. டிசம்பர் 1-ஆம் நாள் பகல் 1.15 மணியளவில் தாயப்பாவின் வீட்டிற்கு ஒரு மாருதி வேன் வந்தது. 8 அல்லது 10 பேர் கொண்ட குழுவினர் நவீனரக ஆயுதங்களுடன் வேனிலிருந்து இறங்கி வீட்டிற்குள் நுழைந்த வேகத்திலேயே மேலும் மூவருடன் மீண்டும் வேனிற்கு திரும்பினர். கோவிந்த ரெட்டி குடியிருக்கும் தாயப்பாவின் வீடு பெங்களூர் பனசங்கரி பகுதியில் சருக்கி லே-அவுட்டில் உள்ளது.

2. டிசம்பர் 1-ஆம் நாள் பிற்பகல் 2.30 மணியளவில் கோவிந்த ரெட்டி என்கிற காமேஸ்வரராவின் மனைவி விஜயம்மா தனது பெண்ணுடன் வீட்டை விட்டு கிளம்பினார்.

3. டிசம்பர் 2-ந்தேதி கொய்யூரு காட்டுப்பகுதியில் ஒரு ஹெலிக்காப்டரையும் அதன் அருகே போலீசாரையும் தாங்கள் கண்டதாக அப்பகுதி பத்திரிக்கையாளர்களும், கிராம வாசிகளும் குழுவினரிடையே தெரிவித்தனர்.

4. டிசம்பர் 2-ஆம் தேதி மாலையே கொய்யூரு காட்டுப்பகுதியில் மோதல் நிகழ்ந்ததான செய்தியை மின்னணு ஊடகங்கள் அறிவித்தன.

5. கோவிந்த ரெட்டி என்கிற காமேஸ்வரராவின் உதவியோடு நக்சலைட் தலைவர்கள் அனைவரும் பெங்களூரில் உயிரோடு பிடிக்கப்பட்டு கொய்யூரு கொண்டு செல்லப்பட்டு கொல்லப்பட்டதாக இ.க.க.மா.லெ., மக்கள் போர்ப்படையின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

6. நக்சலைட் தலைவர்கள் நல்ல ஆதிரெட்டி, சீலம் நரேஷ் இருவரின் பிரேத பரிசோதனை டிசம்பர் 3-அன்று முடிந்தவுடன் உடல்கள் அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. அவர்களது உறவினர்கள் தங்கள் புதல்வர்கள் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் உடல்களில் காணப்படுவதாக புகார் கூறினர். கொல்லப்பட்ட நான்காவது நபர் கரீம் நகர் மாவட்டம் கொர்ஜனப்பள்ளி கிராமத்தை சேர்ந்த சிங்கம் லட்சுமிராஜ்ஜியம் என்கிற அருண் என்று போலீசார் பின்னர் அடையாளங்காட்டினர்.

7. அன்றே எர்ரம் ரெட்டி சந்தோஷ் ரெட்டி என்கிற மகேஷின் தாயார் திருமதி. *அனுசுயா* ஆந்திர பிரதேச உயர் நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனுவை பதிவு செய்தார். இதன் காரணமாக அருண் மற்றும் மகேஷின் உடல்கள் கெடாமல் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டுமென நீதி மன்றம் உத்திரவிட்டது. இராமகுண்டம் என்.டி.பி.சி. மருத்துவமனையில் உடல்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

8. டிசம்பர் 4-ஆம் நாள் பகல் ஆதிரெட்டியின் உடல் அவரது சொந்த கிராமமான கொத்தக் கட்டுவில் எரியூட்டப்பட்டது. இவ் உடலில் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்களும், தோட்டா துளைத்த காயங்களும் காணப்பட்டதை அவரது உறவினர்களும், மனித உரிமை செயலாளிகளும் கண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9. டிசம்பர் 9-ஆம் நாள் அருணின் புகைப்படம் அடையாளம் காணப்படுவதற்காக தெலுங்கு நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. சந்தோஷ் ரெட்டி மற்றும் அருண் இருவரது உடல்களும் மீண்டும் துறை நிபுணர்களால் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

10. டிசம்பர் 10-ஆம் நாள் சந்தோஷ் ரெட்டியின் இறுதிப் பேரணி சடங்கு ஆகியன வாரங்கல் மாவட்டம் கடிவெண்டி என்ற ஊரில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள நடந்து முடிந்தது. அவரின் தாயார் தன் மகன் போலீசால் பிடித்து சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக புகார் கூறினார்.

11. டிசம்பர் 13-ஆம் நாள் கர்நாடக மாநில உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியிடம் புரட்சிகர கட்சிகளின் சார்பாக சம்பவம் பற்றிய ஒரு நினைவு பதிவுக் குறிப்பு அளிக்கப்பட்டது. இக் குறிப்பு ஒரு பொது நல வழக்காக பதிவு செய்யப்பட்டு இது குறித்து விசாரிக்குமாறு கர்நாடக போலீசுக்கு உயர் நீதி மன்றம் உத்தரவிட்டது.

**உண்மையில் நடந்தது என்ன?**

போலீசார் பெங்களூரிலிருந்து மூன்று மக்கள் போர்ப்படை தலைவர்களை கடத்திச் சென்றார்கள் என்பதை கண்ணால் கண்ட சாட்சியங்கள் உள்ளன. கோவிந்த ரெட்டி வீட்டின் அக்கம் பக்கத்தவர்கள் இந்நிகழ்ச்சிக்கு ஆதாரமாகவே உள்ளனர். டிசம்பர் 24-ஆம் நாள் குழு உறுப்பினர்கள் பெங்களூர் சென்றிருந்தபோது தாயப்பா வீட்டை ஆய்வு செய்தனர். அவரது வீட்டு சாப்பாட்டு மேசையில் கழுவப்படாத பாத்திரங்களும், தட்டுகளும், அதிகமான எண்ணிக்கை ஜோடி செருப்புகளும் இருந்ததை குழு கண்டது. கண்ணால் கண்ட சாட்சியங்கள் குழு உறுப்பினர்களிடையே பேசும்போது, எட்டு அல்லது பத்து பேர் நவீன இரக ஆயுதங்களுடன் டிசம்பர் 1-ஆம் தேதி சரியாக 1-30 மணிக்கு இரு வாகனங்களில் இங்கு வந்து இறங்கினர். தாயப்பா வீட்டிற்கு முன்னுள்ள காலியிடத்தில் ஒரு வாகனம் வட்டமடித்து நின்றதோடல்லாமல் அந்த வீட்டிலிருந்த மூன்று பேரை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து வேகமாக கிளம்பியது. அக்கம் பக்கத்தவர் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் வெளியே வந்து பார்த்தபோது எல்லாரும் அவரவர் வேலையை சென்று பாருங்கள் என்று எச்சரிக்கும் தொனியில் அந்த ஆயுதம் தாங்கிய கூட்டத்தினர் கத்தினர். தமது சகோதரர்கள் மூவர் இரண்டு நாட்கள் வந்து தங்கியிருந்து விட்டு செல்வதாக கோவிந்த் ரெட்டியின் மனைவி விஜயம்மா அக்கம் பக்கத்தவரிடம் கூறிக்கொண்டார். நிகழ்ச்சி நடந்தவுடனேயே வீட்டைவிட்டு கிளம்பிய விஜயம்மா தன் வீட்டிற்கு எதிரேயுள்ள புளோரன்ஸ் ஆங்கிலப்பள்ளியில் படிக்கும் தன் மகளை அழைத்துக்கொண்டு மீண்டும் தன் வீட்டை பூட்டிக்கொண்டு வெளியேறினார். போகும் போது அக்கம் பக்கத்தவரிடம் தான் சொந்த

www.tamilarangam.net

வேலையாக சென்று கொண்டிருப்பதாக தெரிவித்தார். இச்சம்பவம் நடந்தபின் யாருமே கோவிந்த ரெட்டியையும் அவர் மனைவியையும் காணவில்லை.

ஜெ.பி. நகர் காவல் நிலைய துணை ஆய்வாளர் திரு. மெடப்பாவால் இச்சம்பவத்தை மறுக்க முடியவில்லை. இந்த நிகழச்சி முன் கூட்டியே நன்கு திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளதாக தான் கருதுவதாக கூறினார். உயர் நீதி மன்றத்தின் ஆணையின் பேரில் கோவிந்த ரெட்டியை கண்டு பிடிக்க முயற்சி செய்வதாகவும், நிச்சயம் கண்டு பிடித்து விடுவோம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். டிசம்பர் 17-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்ட பெங்களூர் காவல் துறை ஆணையாளர் திரு. மடியால் இந் நிகழ்ச்சி தனது கவனத்திற்கு வரவில்லை என்றார். மேலும், அவர் கூறியதாவது, சனவரி 3-ஆம் நாளன்று இது தொடர்பான வழக்கு ஜெ.பி. நகர் காவல் நிலையத்தில் புலனாய்வுக்காக ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஒரு பிரமாண வாக்கு மூலத்தை உயர் நீதி மன்ற ஆணையின் பேரில் அங்கு பதிவு செய்திருப்பதாக தெரிவித்தார். கர்நாடக போலீசாரின் ஒத்துழைப்புடனேயே கொல்லப்பட்ட மூவரையும் ஆந்திர போலீஸ் டிசம்பர் 1-ஆம் நாளன்று பெங்களூரில் வைத்து பிடித்ததை நகரின் பத்திரிக்கையாளர்கள் உறுதிப்படுத்தினர். மக்கள் போர்ப்படையின் செய்திக் குறிப்பிலிருந்தும் சரி மற்ற சந்தர்ப்ப சூழ்நிலைகள், செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் வைத்து பார்க்கும் போது கொல்லப்பட்ட மூவரும் டிசம்பர் 1-ஆம் நாளன்று பெங்களூர் தாயப்பா இல்லத்தில் வைத்தே கோவிந்த ரெட்டி மற்றும் அவரது மனைவி உதவியுடன் பிடிக்கப்பட்டுள்ளார்கள் என நம்புவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

## ஒரு அப்பாவி பலி இலட்சுமி இராஜ்ஜியம்

சிங்கம் இலட்சுமி இராஜ்ஜியம் என்கிற அருணின் சொந்த கிராமத்திற்கு டிசம்பர் 26-ஆம் நாளன்று குழு சென்றிருந்தது அருணின் தந்தை சிங்கம் வெங்கிடு, சகோதரர் சிங்கம் நரசையா மற்றும் தாய் சிங்கம் போசணி ஆகியோரை குழு சந்தித்தது. டிசம்பர் 1ஆம் தேதியன்று இரவு லட்சுமி ராஜ்ஜியத்தைத்தேடி போலீசார் தமது வீட்டிற்கு வந்ததாக அவர்கள் குழுவினரிடம் தெரிவித்தனர். போலீசைக் கண்டு பயந்த அவர்கள் தமது மகனின் உயிருக்கு ஆபத்து நேருமோ-கைது செய்து கொண்டு போய் விடுவார்களோ என்ற பயத்தில் போலீசாரிடம் லட்சுமி ராஜ்ஜியம் பற்றி எதுவும் கூற மறுத்து விட்டனர். சிங்கம் நரசையாவை கடுமையாக தாக்கிய போலீசார், அவரது சகோதரர் இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுககாமல் போனால், `மோதல்' என்ற பெயரில் கொன்று விடப் போவதாக மிரட்டினர். பின் நரசையாவுடன், வீட்டை விட்டு வெளியேறிய போலீசார் லட்சுமி ராஜ்ஜியம் தூங்கி கொண்டிருந்த ஒரு வயலை நோக்கி சென்றனர். அது அறுவடைக் காலமாதலால் குமாரி லிங்கையாவின் வயலிற்கு லட்சுமிராஜ்ஜியம் சென்று விட்டிருந்தார், அங்கே கீற்றுகளை கீழே விரித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குமாரி லிங்கையா, அவரது மகன் ரமேஷ் மற்றும் லட்சுமி ராஜ்ஜியம் ஆகியோர் தூங்கிக் கொண்டிருப்பதை போலீசார் கண்டனர், போலீசைக் கண்டவுடன், லட்சுமி ராஜ்ஜியம் கண்விழித்தபோது விரைந்து செயல்பட்ட போலீசார், அவரை சூழ்ந்து கொண்டு ஒரு துண்டினால் கைகளை பின்புறம் வைத்து கட்டி, ஜீப் நின்றிருந்த கிராமத்திலுள்ள காந்தி சிலையை நோக்கி கொண்டு சென்றனர். போலீசாரின் சட்டாம்பிள்ளைத்தனம் குறித்து கேள்விக் கேட்டதற்காக, குமாரி லிங்கையாவும் அவரது மகனும் போலீசாரால் தாக்கப்பட்டனர். கிராமத்தை விட்டு வெளியேறும் போது போலீசு சிங்கம் வெங்கட்டின் வீட்டிற்குமுன் ஜீப்பை நிறுத்தி மறுநாள் காலை எல்லாரெட்டி காவல்நிலையம் சென்று தகவல் தெரிந்து கொள்ளுமாறு கூறிவிட்டு சென்றனர்.

மறுநாள் காலை கிராம அலுவலர்களுடன் லட்சுமி ராஜ்ஜியம் குடும்பத்தினர் எல்லாரெட்டி காவல் நிலையம் சென்று லட்சுமிராஜ்ஜியம் குறித்து தகவல் கேட்டனர். மிகுந்த வியப்புடன் அவர்களை விசாரித்த போலீசார் லட்சுமிராஜ்ஜியம் குறித்தோ முந்தைய நாள் சம்பவம் குறித்தோ தமக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டனர். இது போன்ற மோதல்'கள் நிகழ்த்தப்படும் போது வழக்கமாக அதனைச் செய்யும் சிறப்பு அதிரடிப்படையோ, கிரேஹண்ட்ஸ் படையினரோ உள்ளூர் போலீசுக்கு இது குறித்து தகவல்களை தெரிவிப்பதே இல்லை என்ற கரீம்நகர் பத்திரிக்கையாளர்கள் குழுவினரிடம் பேசும்போது, இது போன்றவற்றிற்கு யார் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை தெரிவிக்க வேண்டியவர்கள் காவல்துறை உயர் அதிகாரிகளே என்றனர்.

ஆந்திப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் அருணின் போட்டோ டிச-9 ஆம் தேதியன்று தெலுங்கு தினசரிகளில் வெளியிடப்பட்டது. இதிலிருந்தே கொய்யூரு 'மோதல்' பலியானவர்களில் ஒருவர் லட்சுமி ராஜ்ஜியம் என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டினர். டிச-1 ஆம் தேதி போலீசாரால் லட்சுமி ராஜ்ஜியம் அழைத்துச் சென்று கொல்லப்பட்டு அவரது உடல் மூவரது உடலுடன் கிடத்தப்பட்டது சந்தேகத்துக்கிடமின்றி உறுதியாகின்றது. கொய்யூரு காட்டில் இப்படியொரு 'மோதல்' நாடகத்தை அரங்கேற்றுவதற்காகவே லட்சுமி ராஜ்ஜியத்தை கொன்று விட்டு தமது தேடுதலின் போது கரீம்நகர் மாவட்டம் மத்தானி பகுதியில் ஆயுதம் தாங்கிய குழுவில் அவர் இருந்ததாக போலீசு கதைவிட்டது.

**நீதி மன்றத்தின் தலையீடு,**

மோதல் என்ற பெயரில் கேடான வழிகளில் நக்சலைட்டுகளைக் கொன்றுவிட்டு உடல்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்வது அல்லது 'மோதல்' நடந்த இடத்திற்கே மருத்துவர்களை வரவழைத்து பிரேத பரிசோதனை நடத்துவது போன்றவை ஆந்திர போலீசுக்கு கைவந்த கலையாகும். பின்னர் சிறிது கூட காலம் கடத்தாமல் பிணத்தை புதைப்பதற்கோ, எரிப்பதற்கோஆன ஏற்பாடுகளை செய்து விட்டு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலான நேரங்களில் இறந்தவர்களின் உடல்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பார்ப்பதற்கோ, எடுத்துச் செல்வதற்கோ இயலாதவாறு செய்து விடுவர் போலீசார். அவ்வுடல்கள் போலீசாரின் பாதுகாப்புடனும், மேற்பார்வையுடனும் எரியூட்டப்படும். எண்ணற்ற தடவைகள் போலீசார் இந்த இறுதி நிகழ்ச்சிகளில் தலையிட்டு தொல்லை கொடுத்துள்ளனர். இதுபோன்ற மனிதத் தன்மையற்ற செயல்கள் பலமுறை மனித உரிமை-சனநாயக அமைப்புகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. 1997-98 களில் நமது அமைப்பு பலியானவர்களின் உடல்களை கோரிப் பெற்று, இது போன்ற இறுதி நிகழ்ச்சிகள் போலீசின் தலையீடு இன்றி பலியானவர்களின் உறவினர் நண்பர்களை வைத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்காக பலமுறை உயர் நீதி மன்றத்தின் தலையீட்டை மனித உரிமை வழக்கறிஞர்கள் கோரிப்பெற்றுள்ளனர். கடந்த காலங்களில் இறந்தவர்களின் உடல்கள் உடனேயே உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், மறுபிரேத பரிசோதனை தேவைப்படும் போது அதை செய்யுமாறும் போலீசாருக்கு பலமுறை நீதிமன்றம் ஆணைகளை வழங்கியுள்ளது.

சந்தோஷ் ரெட்டியின் தாயார் டிசம்பர் 3-ஆம் தேதியன்று மீண்டும் பிரேதப் பரிசோதனை செய்யப்படுவதற்கான ஆணையைக்கோரி ஒரு ரிட் மனுவை உயர் நீதி மன்றத்தில் பதிவு செய்தார். நல்ல ஆதிரெட்டி, சந்தோஷ் ரெட்டி, நரேஷ் மற்றும் அருண ஆகியோர் பெங்களூரிலிருந்து பிடித்துவரப்பட்டு கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் பொய்யாக 'மோதல்' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டனர் என்றும், முறையான பிரேதப்பரிசோதனை ஆய்வுகள் செய்யப்பட்டால் கொல்லப்படுவதற்கு முன் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அறிகுறிகளை அவர்கள் உடல்களில் காண முடியும் என்றும், 'மோதல்' கொலைகள் குறித்து முதல் தகவல் அறிக்கையை அரசு பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை 'தேசிய மனித உரிமை ஆணையம் வலியுறுத்தியுள்ளதான செய்தியை வாதிக்காக பேசிய வழக்கறிஞர், திரு. கண்ணபிரான் நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இது குறித்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்கு சி.பி.ஐ. போன்ற சுதந்திரமான புலனாய்வு அமைப்புகளிடம் ஒப்படைக்கப் படவேண்டும், துறை வல்லுனர்களைக் கொண்டு ஐதராபாத்தில் மறுபிரேதப் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்தார். அதேபோது ஆதிரெட்டி மற்றும் நரேஷின் உடல்கள் அவரது உறவினர்களால் பெற்று செல்லப்பட்டு விட்டதாக அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அடிலாபாத் துணை கண்காணிப்பாளரிடம் இவ்வழக்கு புலனாய்வுக்காக ஒப்படைக்கப்பட்டது.

இந்த விண்ணப்பத்தை பார்வையிட்ட நீதிபதி திரு. ஜி. ரகுராம், சந்தோஷ் ரெட்டி, அருண் ஆகியோரது உடல்களை கெடாதவாறு பாதுகாப்பாக வைக்குமாறு போலீசுக்கு ஆணையிட்டார். நீதி மன்றத்தின்

www.tamilarangam.net

ஆணைகள் தொலைபேசி மூலமாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு உடனேயே தெரிவிக்கப்பட்டது. இதன்படி இருவரது உடல்களும் ராமகுண்டத்திலுள்ள என்டிபிசி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டன. மருத்துவக்குழு ஒன்று 8-ஆம் தேதி ராமகுண்டம் வந்திருந்து மறு பிரேத பரிசோதனை ஆய்வுகளை நடத்தியது. இதன் முடிவு பற்றிய தகவல்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. முதல் பிரேத பரிசோதனை டிசம்பர் 3-ஆம் தேதி பெட்டபல்லி மருத்துவமனையில் நடத்தப்பட்டது. அதன் சாரம்-துப்பாக்கி சூட்டினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் அதிக ரத்தப்போக்கு ஆகியவற்றின் காரணமாகவே மரணம் ஏற்பட்டது என்றது.

இம் மூவரையும் ஆந்திர போலீசு கைது செய்ய எந்த விதமான ஒத்துழைப்போ உதவியோ செய்யப்படவில்லை என கர்நாடக போலீசு மறுத்தது. காமேஸ்வரராவ் மற்றும் அவரது குடும்பத்தினரை கண்டுபிடிக்க பெருமளவிலான முயற்சிகள் செய்ததாக கர்நாடக போலீஸ் தெரிவித்தது. இந்த ரிட் மனுவை ஏற்றுக்கொண்ட கர்நாடக உயர்நீதி மன்றம் கோவிந்த ரெட்டி என்கிற காமேஸ்வரராவை உடனே உயர்நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படி போலீசாருக்கு உத்தரவு பிறப்பித்தது. ஜனவரி 3-ஆம் தேதியன்று காவல் துணை கண்காணிப்பாளர் திரு. பி.சி. புட்ணவர் உயர் நீதி மன்றத்திற்கு தெரிவித்தது என்னவென்றால், விசாரணை காலத்தில்-தாயப்பாவின் மகனாகிய தனராஜ் என்பவரின் வாக்கு மூலத்தை நான் பதிவு செய்தேன். காமேஸ்வரராவ் வீட்டின் முன்பிருந்து 01-12-1999 அன்று சுமார் 12-30 மணிக்கு வெண்ணிற மாருதி வேன் வேகமாக புறப்பட்டுச் சென்றதை தான் பார்த்ததாக தன்ராஜ் கூறினார். வேன் வந்து சென்றது குறித்து திருமதி. காமேஸ்வரராவ் இது தங்கள் குடும்ப விஷயம் என காட்டமாக தன்ராஜிடம் கூறிவிட்டார். தன்ராஜும் அவர் குடும்பத்தினரும் அதே நாளில் ஒரு திருமண வரவேற்பிற்கு சென்றுவிட்டு இரவு 9,30 மணிக்கு திரும்புகையில் காமேஸ்வரராவின் வீடு பூட்டியிருந்ததாக அவர் என்னிடம் தெரிவித்தார். சம்பவம் நடந்த அன்றிலிருந்து 17-ஆம் தேதி வரை காமேஸ்வரராவையோ அவரது குடும்பத்தினரையோ யாரும் காணமுடியவில்லை. 17.12.1999 அன்று இரவு 11-45 மணியளவில் காமேஸ்வரராவ் வீட்டில் காணப்பட்டதாகவும் இரண்டு பைகளுடன் ஒரு மாருதி வேனில் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்றதை கண்ட தாயப்பா உடனே தொலைபேசி மூலம்இந்த செய்தியை போலீசாருக்கு தெரிவித்தார். தகவல் கிடைத்த உடனேயே போலீஸ் படை விரைந்து சென்று காமேஸ்வரராவின் வீட்டை சூழ்ந்த போது முன்பே அவர் வீட்டை விட்டு வெளியேறி விட்டிருந்தார். இது போன்ற உயர்ந்த பட்ச நடவடிக்கைகளை காவல்துறை எடுத்திருந்த போதிலும் காமேஸ்வரராவையோ, அவரது குடும்பத்தினரையோ இன்று வரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இருந்தபோதிலும் டிசம்பர் 1-ஆம் தேதியன்று பெங்களூர் தாயப்பா வீட்டில் நடந்த சம்பவத்தை கர்நாடக காவல் துறை மறுக்க வில்லை. குழு உறுப்பினர்களிடையே ஜெ.பி. நகர் துணைஆய்வாளர் பேசும் போது இச்சம்பவம் முன்பே நன்கு திட்டமிடப்பட்டதாக இருக்குமென தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாருதி வேன் வந்து சென்றதையும் அவர் மறுக்க வில்லை. மூன்று பேர் பிடித்து செல்லப்பட்டதையோ, 1-ஆம் தேதி அதே வேனில் கோவிந்த ரெட்டி வீட்டை விட்டு வெளியேறியதையோ மீண்டும் 17-ஆம் தேதி அன்று வந்து உடனே 2 பைகளுடன் சென்றதையோ போலீசார் செய்திருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த கர்நாடக போலீஸ் முயன்றது. ரிட் மனுவை ஏற்றுக் கொண்ட கர்நாடக உயர் நீதிமன்றம் தாயப்பாவின் வீட்டிலுள்ள தடயங்களை பாதுகாப்பதற்காக அவரது வீட்டை பறிமுதல் செய்யுமாறு போலீசுக்கு ஆணையிட்டது. டிசம்பர் 2-ஆம் தேதி கொய்யூரு காட்டுப்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மூன்று உடல்களும் பெங்களூரில் அந்த வீட்டிலிருந்து மாருதி வேனில் போலீசால் பிடித்துச் செல்லப்பட்ட மூவரது உடல்களே என தாயப்பாவின் மகன் தனராஜூம் அவரது வீட்டின் அக்கம் பக்கத்தவரும், பத்திரிக்கையாளர்களும் உறுதி செய்தனர். நான்காவது நபர் லட்சுமிராஜ்யம் மோதல் நாடகத்திற்காக என்றே அழைத்து வரப்பட்டு கொல்லப்பட்டார்.

## தே.ம.உ.ஆ. தலைவர் வசதிக்கேற்ப புறக்கணித்தல்

சட்டம் மற்றும் நீதிமன்றங்களுக்கு மரியாதை தருவதேயில்லை ஆந்திர போலீசார். மக்களைக் கொன்றொழிக்கும் உரிமை அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளதாக ஆந்திர போலீசார் கருதுகின்றனர். இச்சம்பவம் குறித்த நீதிவிசாரணை ஏதும் தேவையில்லை என்றும், என்ன விலை கொடுத்தாவது அரசு போலீசின் பக்கம் நிற்கும் என்றும், முதல்வர் சந்திரபாபு நாயுடு வெளிப்படையாக அறிவித்து விட்டார். நக்சலைட் பிரச்சனை குறித்து விவாதிக்கப்பட்டதாக கூறப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் அனைத்து எதிர் கட்சிகளுமே கொய்யூரு சம்பவம் குறித்து நீதி விசாரணை தேவை என வலியறுத்தின, இது குறித்து பதிலளித்த உள்துறை அமைச்சர் தேவேந்திர கவுடி ஏற்கனவே தேவையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு விட்டதாகவும் அதனால் நீதிமன்ற விசாரணை தேவையில்லை என்று கூறிவிட்டார். இந்த அரசு ஏன் போலீசைக் காப்பாற்றுவதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறது என்பதை யாரும் மிக எளிதாகவே புரிந்து கொள்ள முடியும். இதிலிருந்தே இ.க.க. மா.லெ.மா.போ.படை தலைவர்கள் போலீசால் இல்லாதொழிக்கப் பட்டு விட்டனர் என்பதை நம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி, ஜே. எஸ். வர்மா டிசம்பர் 28 ஆம் தேதி ஐதராபாத் வந்திருந்த போது நற்சான்றிதழ் ஒன்றை சந்திர பாபுநாயுடுவிற்கு வழங்கியுள்ளார். தேசிய மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதிலும் முழுமைபெறச் செய்வதிலும் ஆந்திர மாநிலம் முனைப்பு காட்டி வருவதால் லாக்கப் படுகொலைகளை மிகவும் குறைத்துவிட்டார் சந்திரபாபு நாயுடு என்று பாராட்டினார் ஜே. எஸ். வர்மா. ஆனால் வியப்புக்குரிய செய்தி என்னவெனில் `மோதல்' குறித்து மார்ச்சு 1997 தே.ம.உ.ஆ. முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் குறித்திருந்த பரிந்துரைகள் பற்றி சந்திரபாபு நாயுடுவிடம் கேட்கவோ வற்புறுத்தவோ செய்யவில்லை ஜே.எஸ்.வர்மா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தே.ம.உ. ஆணையத்தின் கடிதம்.**

மார்ச்சு 1997

பாரமிகு முதல்வர் அவர்களுக்கு,

1. சட்டத்தின் ஆட்சிக்கு தடையாக பொய்யான `மோதல்'கள் என்ற பெயரில் நபர்கள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் எனினும் இப்போது இது போன்ற `மோதல்' செயல்கள் மிகவும் அதிகரித்து விட்டதாக பொதுமக்கள் பலரிடமிருந்தும், அரசுசாரா நிறுவனங்களின் உறுப்பினர்களிடமிருந்தும் புகார்கள் பல ஆணையத்திற்கு கிடைத்துள்ளது. குற்றங்களிழைத்ததாக கூறப்படுவோர் இயற்கைக்கு மாறான வழிகளில் கொல்லப்படுவது பற்றி எந்த புலனாய்வும் மேற்கொள்ளப் பட்டதாக தெரியவில்லை.

2. இது போன்ற புகார்களில் ஒரு எடுத்துக்காட்டு, ஆந்திரப்பிரதேச மனித உரிமைக்குழு புகார் எண். 234 (1 முதல் 6 வரை) 93-94 ஆண்டுகளில் ஆணையம் முன் தெரிவித்த ஒன்றாகும். சட்ட விரோதமாக மக்கள் போர்ப்படைக் குழுவை சேர்ந்தவர்களை போலீசார் கைது செய்ய முற்பட்ட போது அவர்கள் போலீசாரை கொல்ல முயன்றதாகவும், ஆனால் போலீசு அவர்களை கொன்று விட்டதாகவும் போலீசு மீது ஆ.பி.ம.உ.கு புகார் கூறியுள்ளது. இது போன்ற சம்பவங்களில் நீதியற்றதுமான கோபமூட்டக் கூடியதுமான பொய்யாக `மோதல்' என்ற பெயரில் அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதாக ஆ.பி.ம.உ.கு. தெரிவித்துள்ளது.

3. இம்மாதிரியான `மோதல்' சம்பவம் ஆந்திர மாநிலத்தில் எங்கு நடந்தாலும் அம் `மோதலில்' ஈடுபடுகின்ற போலீசு குழுவிற்கு பொறுப்பானவர் `மோதலில்' உயிரிழக்கும் நபரை பற்றிய தகவலை காவல் நிலையத்தில் தெரிவிக்க வேண்டும். கொல்லப்பட்ட நபர்கள் பற்றி ஆ.பி.ம.உ.கு.வின் கவனத்திற்கு வந்த வழக்குகளில் போலீசு பதிவு செய்துள்ளது. வழக்கமாக இது, இ.பி.கோ.307-வது பிரிவின் கீழ் கொல்லப்பட்ட நபர் (அ)நபர்கள் போலீசை கண்டவுடனேயே துப்பாக்கியால் சுட்டதாகவும் தங்களை பாதுகாத்து கொள்வதற்காக போலீசு திருப்பி சுட நேர்ந்ததாகவும் கூறிக்கொள்கிறது. சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் இவ்விஷயம், போலீசு சுட்டதன் காரணமாக குண்டு காயம்பட்டு மேற்கண்ட நபர்கள் (போலீசால் குற்றஞ்சாட்டப் பட்டவர்கள்) இறந்து விட்டதாக முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்படுவதுடன் வழக்கு முடப்பட்டு விடுகிறது. மேற்கொண்டு புலனாய்வு ஏதும் செய்யப்படு வதில்லை போலீசார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு குறித்து குற்ற அறிக்கை பதிவு செய்யப்படுவதோ அது குறித்து முறையான விசாரணை செய்யப்படுவதோ கிடையாது. இது போலீசின் நடவடிக்கையை

www.tamilarangam.net

நியாய மென உறுதிப்படுத்தும் செயல் ஆகும்.

4. எந்த ஒரு குடிமகனின் உயிரையும் பறிக்கும் குற்றம் புரியும் படி எந்த ஒரு சட்டத்தின் கீழும் போலீசுக்கு அனுமதி தரப்படவில்லை. இது போன்ற மனித உயிரை பறிக்கும் செயலில் ஈடுபடும் போலீசார் குற்ற முடைய மனிதக் கொலை புரிந்தவராகவே கருதப்படுவர். போலீசார் தனது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக செய்யும் கொலைகள்கூட இந்தியாவின் குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு குற்றவியல் சட்டப் பிரிவு 46-படி இதுபோன்ற கொலைகளை போலீசார் சரியென நிரூபிப்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அல்லாவிடில் நபர்கள் கைது செய்யப் பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு மரணதண்டனையோ ஆயுள் தண்டனையோ வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிரிவு 46-இன் கீழுள்ள அதிகாரத்தின்படி சாவுகள் நேர்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. சட்டப் படியான தனிப்பட்ட பாதுகாப்பு காரணங்களுக்கல்லாமல் இது போன்ற கொலைகள் 'மோதல்' என்ற பெயரைக் கொன்டு செய்யப்படுமானால் அது மனிதத் தன்மையற்ற குற்றமாகவே கருதப்பட்டு குற்றவியல் சட்டம் பிரிவு 46-இன் கீழ் இத்தகையவற்றில் ஈடுபட்ட போலீசார் கைது செய்யப்படவேண்டும். இத்தகைய 'மோதலில்' கொலை நிகழும் பட்சம் முறையாக புலனாய்வு செய்யப்பட்டு மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ்கொண்டு வரப்பட வேண்டும்.

5. மேற்கண்ட நடைமுறைகளின் கீழ் முறையான முடிவுகள் எடுக்கப்படுவது ஆந்திரப் பிரதேச போலீசாரால் கடைபிடிக்கப்படுகிறதா என்பது ஆணையம் முன்பு ஒரு கேள்வியாகவே உள்ளது. அனைத்து அமைப்புகளின் கருத்துகளையும் கேட்ட பின்பு அரசியல் சட்டம் 21-வது பிரிவின் பாதுகாப்பு வாய்ப்புகளை உறுதிப்படுத்துவது அரசின் கடமையாக உள்ளது என்பதை 5-11-1996 தேதியிட்ட ஆணையத்தின் ஆணை தெரிவிக்கின்றது. பெரும்பாலும் வழக்குகளில் இது போன்ற சரியான நடைமுறைகளை ஆந்திர பிரதேச அரசு கடைபிடிக்கவில்லை என்பதை அதன் தவறான நடத்தைகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. சரியான நடைமுறைகள் கடைபிடிக்க படுவதற்கான காரணகாரியங்கள் குறித்த ஆணையத்தின் கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகள் ஏற்கனவே ஆந்திர பிரதேச அரசால் ஏற்றுக்கொள்ளப் பட்டவையே ஆகும்.

6. நாட்டின் பல்வேறு பகுதிகளில் மனித உரிமைகள் குறித்து எழும் முக்கிய பிரச்சனைகள் குறித்து கவனம் எடுத்ததிலிருந்து ஒரு முறையான நடைமுறையை அனைத்து மாநிலங்களும்

www.tamilarangam.net

கடைபிடிக்க தக்கதென கருதி ஆணையம் வேண்டுகிறது. அத்தகைய நடைமுறையில் சுருக்கமாக கீழே சொல்லப்பட்டுள்ளது.

அ. போலீசாருக்கும் `மோதலில்' கொல்லப்பட்டவருக்கும் இடையேயான `மோதல்' சாவு குறித்த தகவல்களை தொடர்புடைய காவல் நிலையம் அல்லது பொறுப்பான காவல் அதிகாரி தெரிந்து கொண்ட உடனேயே இது பற்றிய தகவல்கள் பொருத்தமாக சரியாக அதற்குரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆ. `மோதல்' நிகழ்ந்ததற்கான வாய்ப்புகளும் சூழ்நிலைகளும் உண்மையில் இடம் பெற்றிருந்தனவா, அத்தகைய `மோதல்'கள் சாவு வரை இட்டுச் செல்லக் கூடியதா என்பதை `மோதல்' யாரால் நடத்தப்பட்டுள்ளதோ அவரை தொடர்புடைய காவல் நிலைய அதிகாரிகள்விசாரித்தறிவதன் மூலம் உண்மை விவரங்கள் அறியப்பட வேண்டும்.

இ. தொடர்புடைய காவல்நிலைய அதிகாரிகளே-அந்த குழுவினரே `மோதலில்' பங்கு பெற்றிருந்தால் இது போன்ற விசாரணைகள் பொருத்தமான முறையில் சி.பி.ஐ. அல்லது அது போன்ற மாநில புலனாய்வு அமைப்புகள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஈ. இது போன்ற வழக்குகள் விசாரிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்ட போலீசு அதிகாரிகள் தண்டிக்கப்படும் போது `மோதலில்' கொல்லப்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நட்டஈடு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படலாம் அதுவரை நட்ட ஈடு குறித்து பொறுமையாக இருக்க வேண்டும்.

7. இது போன்ற நடைமுறையினை மோதல் மற்றும் இது போன்ற சூழ்நிலைகள் வரும்போது கடைபிடிக்கக் கோரி உங்கள் மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் காவல்துறை தலைமை இயக்குனர் மூலம் ஆணையிடுமாறு தங்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாழ்த்துக்களுடன்

தங்கள்உண்மையுள்ள

எம்.என்.வெங்கடாச்சலய்யா.

**முடிவு**

இதுபோன்ற `மோதல்' கதைகளை புனைவதில் போலீஸ் எவ்வளவு கொடூரமாக நடந்துக்கொள்கிறது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டு கொய்யூரு சம்பவமாகும், `மோதல்' என்ற பெயரில் நடைபெறும் நிகழ்வுகள் பெரும்பாலும் வேண்டுமென்றேயும் இரக்கமற்றும் மனித தன்மையற்றும் போலீசால் செய்யப்படுகின்ற கொலைகளேயாகும்.

www.tamilarangam.net

மிகவும் குறிப்பிடத்தக்க வகையில்-இந்நிகழ்வில் இவர்கள் போலீசாரால் பிடித்து செல்லப்பட்டு தேவையான தகவல்களை பெறுவதற்காக கடுமையாக சித்தரவதை செய்யப்பட்டு பின் மனித தன்மையற்று இரக்கமற்று சுட்டு கொல்லப்பட்டுவிடுகின்றனர்.

ஒரு ஆயுதம் ஏந்திய நக்சலைட் குழு போலீசை தாக்கிய போது அவர்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டி திருப்பிச்சுட நேர்ந்ததாகவும், அதனால் நக்சலைட்டுகள் சிலர் பலியானார்கள் என போலீசு விவரித்துள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளை உண்மையென நம்பவைப்பதற்கான பலியானவர்களின் உடல்களில் (சில. சமயம் பெண்களும் கூட) பச்சை சீருடைகளும் அணிவிக்கப்பட்டு ஆயுதங்கள் அவர்களின் அருகே வைக்கப்பட்டு, ஒரு நாடக காட்சி சித்தரிக்கப்படுகிறது, இது போன்ற நாடக காட்சியில் ஒரு மாற்றும் குறையாமல் கொய்யூரு `மோதலிலும்' காட்டப்பட்டு விட்டது, உண்மை அறியும் கூட்டுக் குழுவின் உறுப்பினர்கள், மேற்கண்ட சந்தர்ப்பங்களிலும், சூழ்நிலைகளிலுமே கொய்யூரு `மோதல்' என்றழைக்கப்படுகின்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது எனவும் இ.க.க.மா.லெ. ம.போ. படை தலைவர்கள் மூவரும் பெங்களூர்-தாயப்பாவின் வீட்டிலிருந்தே பிடித்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பின் கொல்லப்பட்டார்கள் என்று கருதுகின்றனர், இந்த `மோதல்' கதைக்கு வலு சேர்க்கவே கெர்ஜெனபள்ளி கிராமத்தை சேர்ந்த அப்பாவி லட்சுமி ராஜ்ஜியம் என்பவர் பிடித்துவரப்பட்டு கொல்லப்பட்டு பின் அவரது உடல் மேற்கண்ட மூவரது உடலுடன் கிடத்தப்பட்டு விட்டது. இதுபோல ஒவ்வொரு நிகழ்வுகளுமே கொய்யூரு `மோதல்' சம்பவம் பொய்யானது என கூறுவதற்கு ஆதாரமாக உள்ளது.

### கோரிக்கைகள்

1. கொய்யூரு `மோதல்' குறித்து நீதிமன்ற விசாரணை கோரல்

உண்மையை மறைத்து இது ஒரு உண்மையான மோதலென போலீசார் கொய்யூரு `மோதல்' குறித்து கூறிக்கொண்டபோதும் பொதுமக்களும் வெகுசன அமைப்புகளும் இது ஒரு பொய்யான `மோதல்' என்றே கருதுகின்றனர். வெளிப்படையாக ஆட்சிசெய்வதாக முதல்வர் கூறிக்கொள்வதனால் ஏன் இச்சம்பவம் குறித்து ஒரு நீதி விசாரணைக்கு உத்திரவிடக் கூடாது. கொய்யூரு `மோதல்' குறித்து விசாரணை செய்ய உச்ச நீதிமன்ற அமர்வு நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டுமென அரசிடம் குழு கோருகிறது.

2. `மோதல்'களை உடனே நிறுத்துக

பொய்யாக மோதல்கள் என்ற பெயரில் ஆந்திரத்தில் 1998-இல் மட்டும் 275-பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது போன்றே இந்த ஆண்டும் (1999-இல்) இது வரை 226 பேர் கொல்லப்பட்டுவிட்டனர் இ.க.க.மா.லெ. ம.போ. படை அமைப்புகளின் தலைவர்களை, உறுப்பினர்களை பொய்யாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

`மோதல்'கள் என்ற பெயரில் கொன்றொழிப்பது என்பது அரசின் கொள்கையாகவே உள்ளது. இதனால் `மோதல்' கொலைகளை உடனே நிறுத்தி நீதியை நிலைநாட்டுமாறு அரசினை குழு கோருகிறது.

3. இ.க.க.மா.லெ. ம.போ. படை மற்றும் பிற வெகுசன அமைப்புகளின் மீதான தடையை உடனே நீக்குக.

சனநாயக முறைப்படி நடந்து கொள்வதாகவும் சட்ட திட்டத்தின் படி ஆட்சி செய்வதாகவும் கூறும் இந்த அரசானது அரசியல் ரீதியாக மாற்றுக் கருத்தினை மதிப்பது அவசியமாகும். தாங்கள் நம்பிக்கை கொள்ளாத ஒரு அரசினை தூக்கி எறியவும் அதற்கான வழி முறைகளை முடிவு செய்யவுமானதுமான சனநாயக உரிமை மக்களுக்கு உள்ளதென நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நக்சலைட் பிரச்சனை என்பது ஒரு சமூக பொருளாதார பிரச்சனையே என்றும் இது இந்திய அரசியல் சட்டத்தின் கொள்கை நடைமுறைகளின் பிரதிபலிப்பிலிருந்தே உருவாகிறது என்றும் நாம் கருதுகிறோம். ஆனால் அரசானது இப்பிரச்சனையை ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சனையாகவே பார்க்கிறது, இதன்காரணமாகவே இந்த அமைப்பை ஒடுக்க பாசிச வழிமுறைகளை அரசு கொண்டிருக்கிறது. இது போல மிருகத்தனமாக நசுக்கப்படும் போதும் தடை செய்யும் போதுமே வன்முறையிலான வழி முறைகளை இவ்வமைப்புகள் மேற்கொள்ள இடமாகிறது. இத்தடையை நீக்குவதன் மூலம் வன்முறையை குறைக்கமுடிவதுடன் சனநாயக மாற்றுக் கருத்துக்களும் இடம் கிடைக்க வழி ஏற்படும். எனவே இ.க.க.மா.லெ., மக்கள் போர்ப்படை மற்றும் இதர வெகுசன மக்களின் அமைப்புகளின் மீதான தடையை உடனே நீக்குமாறு நாம் கோருகிறோம்.

www.tamilarangam.net

இந்த உண்மை அறியும் கூட்டுக்குழுவில் பங்கேற்ற மனித உரிமை அமைப்புகளின் சார்பில் இந்த அறிக்கை பதிப்பிக்கப்படுகிறது.

1. மக்களின் சனநாயக முன்னணி, கர்நாடகம்.
2. மக்கள் குடியுரிமை கழகம், தமிழ் நாடு.
3. சன நாயக உரிமைகள் பாதுகாப்பிற்கான அமைப்பு, பம்பாய்.
4. லோக்சாகி அக் சங்காதனா, மகாராஷ்டிரா.
5. மனித உரிமை அமைப்புகளின் கூட்டமைப்பு, கேரளா.
6. தேசிய ஜனநாயக முன்னணி, கேரளா.
7. ஜனநாயகஉரிமைகளின் பாதுகாப்பிற்கான அமைப்பு, ஆந்திரா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1968 - 1999 இடையே ஆந்திர பிரதேசத்தில் `மோதல்' என்ற பெயரில் கொல்லப்பட்ட நபர்களின் எண்ணிக்கை**

| ஆண்டு | மோதலில் கொல்லப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1968-77 | சுமார் 335 |
| 1978 | தகவல் இல்லை |
| 1979 | தகவல் இல்லை |
| 1980 | 7 |
| 1981 | 5 |
| 1982 | 4 |
| 1983 | 3 |
| 1984 | தகவல் இல்லை |
| 1985 | 35 |
| 1986 | 20 |
| 1987 | 29 |
| 1988 | 61 |
| 1989 | 51 |
| 1990 | 20 |
| 1991 | 104 |
| 1992 | 256 |
| 1993 | 136 |
| 1994 | 109 |
| 1995 | 67 |
| 1996 | 161 |
| 1997 | 159 |
| 1998 | 275 |
| 1999 | 226 |
| | மொத்தம் 2063 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்றி

பியுசிஎல்

ஏபிசிஎல்சி

மற்றும்

பல்வேறு வகையில்

ஒத்துழைப்பு

நல்கிய

தோழர்களுக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்குப் பொருந்தியதன்றி வேறெந்த வகையிலும் தனி ஒருவருடைய உயிரை அல்லது உரிமையை பறிக்கும் உரிமை எவருக்குமில்லை.

- *இந்திய அரசியல் சட்டப் பிரிவு 21.*

அவர்களுடைய அரசில் பிணவாடை வீசுகிறது என்று கூறுவீர்களானால், "இல்லை, அது எப்பொழுதுமே எங்களின் விருப்பத்திற்கு உகந்த மணம்தான்" என்று அவர்கள் விடையளிப்பார்கள்.

- *கோஸ்ட்லர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்